**2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கை**
**நிறுவனத்தின் பெயர் : தேசிய திட்டமிடல் திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இலக்கம் 237**

பக்க இல.


அத்தியாயம் 01 - நிறுவனச் சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்....................3

1.1 அறிமுகம்....................3

1.2 நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்....................3

1.3 பிரதானமான செயற்பாடுகள்....................4

1.4 நிறுவன விளக்கப்படம்....................5

1.5 திணைக்களத்தின் பிரதானமான பிரிவுகள்....................6

1.6 திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள்....................6

1.7 வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் திட்டங்கள் பற்றிய தகவல்கள்....................6

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலப் பார்வை....................7

2.1 பேரினப் பொருளாதார அபிவிருத்தி....................7

2.2. விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடைகள், பெருந்தோட்டம் மற்றும் மீன்வளம்....................7

2.3 கைத்தொழில், வர்த்தகம், தொழில், மின்வலு மற்றும் எரிசக்தி....................12

2.4 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான போக்குவரத்து....................14

2.5 நகர்ப்புற அபிவிருத்தி, வீட்டுவசதி, நீர் மற்றும் சுற்றாடல்....................15

2.6 சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், விளையாட்டு மற்றும் கலாச்சாரம்....................18

2.7 கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் விருத்தி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்....................20

2.8 பிராந்திய வளர்ச்சி சுற்றுலா மற்றும் சமூகப் பாதுகாப்பு....................23

2.9. பொது முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்....................25

அத்தியாயம் 03 - 2020 மார்கழி 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன்....................27

3.1 நிதிச் செயற்றிறன் கூற்று....................27

3.2. நிதி நிலமைக் கூற்று....................29

3.3. காசுப் பாய்ச்சல் கூற்று ....30
3.4 நிதிக் கூற்றிற்கான குறிப்பு - - - ....32
3.5 வருமானம் சேகரிப்பின் செயற்றிறன் – பொருந்தாது ....33
3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயற்றிறன் ....33
3.7. நி.பி 208 இற்கு அமைவாக இந்த திணைக்களம் / மாவட்ட செயலகம் / ஏனைய அமைச்சுக்களிற்கு முகவராகிய மாகாண சபை / திணைக்களங்கள் என்பவற்றின் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் ....34
3.8. நிதி அல்லாத சொத்துக்களின் செயற்றிறன் கூற்று ....34
3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ....35
அத்தியாயம் 04 – செயற்றிறன் காட்டிகள் ....35
4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற் திட்டத்தின் அடிப்படையில்) ...35
அத்தியாயம் 05 - நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயற்திறன் ....36
5.1 இணங்காணப்பட்டுள்ள அந்தந்த நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிக்கவும் ....36
5.2 நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குக ....36
அத்தியாயம் 06 - மனிதவள சுயவிவரம் ....36
6.1 நிரந்தர ஊழிய முகாமைத்துவம் ....36
6.2 நிறுவனத்தின் செயற்திறனில் மனித வளங்களில் குறைவு அல்லது அதிகரிப்பு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை சுருக்கமாக எடுத்துரைக்க ....36
6.3. மனித வள அபிவிருத்தி ....37
அத்தியாயம் 07 - உடன்பாட்டறிக்கை ....38

## அத்தியாயம் 01 - நிறுவனச் சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்

### 1.1 அறிமுகம்

தேசிய திட்டமிடல் திணைக்களம் 1956 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சரின் தலைமையின் கீழ் தேசிய திட்டமிடல் சபையாக நிறுவப்பட்டு முதன்முறையாக திட்டமிடல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும் விதத்தில், முழுமையான நாட்டையும் உள்ளடக்கியவாறு விரிவான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டமொன்றை முன்வைத்தது. 1961 ஆம் ஆண்டில் இச்சபை மேலும் பலப்படுத்தப்பட்டு பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் திட்டமிடல் திணைக்களமாக நிறுவப்பட்டது. இதன் கீழ், இத் திணைக்களம் ஒரு குறுகிய கால அபிவிருத்தி வேலைத் திட்டத்தைத் தயாரித்து, திட்டமிடல் செயற்பாட்டிற்காக உருட்டல் திட்ட (rolling plan) எண்ணக்கருவை முதல் முறையாக அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் , 1965 ஆம் ஆண்டில் இத் திணைக்களம் திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டு மூலதன வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்தல் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை போன்றன ஒப்படைக்கப்பட்டன. 1974 ஆம் ஆண்டில், தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது, அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த அரசாங்கங்கள் இதனை அவ்வப்போது நிதி, திட்டமிடல் மற்றும் கொள்கை மேம்பாட்டுக்கு பொறுப்பான அமைச்சுக்களுடன் இணைத்திருந்தன. தற்போது, இலங்கையின் பிரதானமான அபிவிருத்தி ஆலோசகராகவும், வசதிகள் வழங்குநராகவும், நிதிப் பிரமாண எண் 3 (2) மற்றும் எண் 35 ஆகியவற்றால் ஒதுக்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப திணைக்களம் அதன் செயற் பாடுகளைச் செயற்படுத்துகிறது.

### 1.2 நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

**தூர நோக்கு**

தேசத்தின் மிகை திறனுடைய கொள்கை ஆலோசகராகவும் அபிவிருத்தியில் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

**பணிக்கூற்று**

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில்வாண்மையைப் பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.


**நோக்கம்**

1. அரச முதலீடுகளை வினைத்திறனான முறையில் பயன்படுத்தல்.
2. குறித்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் பொது முதலீட்டின் மூலம் சமூக-பொருளாதார நன்மைகள் உயர்ந்த பட்சத்தில் காணப்படும் விதத்தில் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களை தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப வகுக்கத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குதல்.

### 1.3 பிரதானமான செயற்பாடுகள்

- தேசிய மற்றும் துறைசார் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்க பங்களிப்பை வழங்குதல்.
- ஒரு நடுத்தர கால பொது முதலீட்டு கட்டமைப்பை உருவாக்கி புதுப்பித்தல்.
- திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்.
- அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளை வழங்குதல்.
- திட்ட அணுகுமுறைகளை முதன்மைப் படுத்தல், புதுப்பித்தல்.
- தேவைக்கேற்ப திட்டங்களைப் புதுப்பித்தல்.
- தேசிய மற்றும் துணை தேசிய மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு வழிகாட்டுதல்.
- சிறப்பு / பிராந்திய வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்.
- தேசிய திட்டமிடல் செயல்முறையின் பிரதான ஓட்டத்தில் நிலைதகு அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துதல்.
- பரவலாக்கப்பட்ட மூலதன வரவு செலவுத் திட்டத்திற்கான திட்ட முன்மொழிவுகளை பரிந்துரைத்தல்.
- அபிவிருத்திப் பங்காளிகளுடன் அபிவிருத்தி தேவைகளை இனங்காண உதவுதல்.
- சிறப்புப் பணிகளில் பங்கேற்றல்.
- வெளியிடும் துண்டுப்பிரசுரங்களை தயாரித்தல்.
- திட்டமிடல் மற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள தேசிய மற்றும் உள்ளூர் அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்தல்.
- அரசாங்க கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களை மதிப்பாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் (செயற்படுத்தப்படும் வரை).
- ஊழியர்களின் திறன் மேம்பாடு.
- பொது நிர்வாகம் மற்றும் நிதி.

## 1.4 நிறுவன விளக்கப்படம்



## 1.5 திணைக்களத்தின் பிரதானமான பிரிவுகள்

திணைக்களத்தின் செயற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்காக, திணைக்களமானது 9 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 9 துறைகளும் பொருளாதார மேம்பாட்டுத் துறையில் பல்வேறு துறைகளைக் குறிக்கும் 26 துணைத் துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் அவை பிரதிநிதித்துவப்படுத்தும் துறைகளுடன் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கூடாக மேற்கொள்ளப்படும் அந்தந்த பிரிவுகளின் கொள்கை வகுத்தல் மற்றும் ஏனைய அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகக் காணப்படும்.

இதற்கு மேலதிகமாக , பேரினப் பொருளாதார திட்டமிடல், தகவல்களை வழங்குதல் மற்றும் திணைக்களத்தின் நிர்வாகம் ஆகிய நடவடிக்கைகளிற்காக தனியான மூன்று ஆதரவு அலகுகள் உள்ளன.

1. தகவல் மேம்பாட்டு மையம்
2. நிர்வாகப் பிரிவு
3. நிதிப் பிரிவு

திணைக்களத்தின் பிரிவுகள்

- பேரினப் பொருளாதார வளர்ச்சி
- விவசாயம், நீர்ப்பாசனம், நிலம், கால்நடை மற்றும் மீன்வளம்
- தொழில் மற்றும் வர்த்தகம், மின் வலு மற்றும் எரி சக்தி
- வீதிகள், துறைமுகங்கள், விமான போக்குவரத்து மற்றும் போக்குவரத்து
- நகர அபிவிருத்தி, வீட்டுவசதி, நீர், சுற்றுச்சூழல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம்
- சுகாதாரம் மற்றும் உள் நாட்டு மருத்துவம், விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் மத விவகாரங்கள்
- கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்
- பிராந்திய அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் சமூக பாதுகாப்பு
- பொது முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்

## 1.6 திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள்

திணைக்களத்தின் கீழ் எந்த நிறுவனங்களும் / நிதியங்களும் இல்லை

## 1.7 வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் திட்டங்கள் பற்றிய தகவல்கள்

1. திட்டத்தின் பெயர்: நிரலாக்க திட்டங்களைத் தயாரிக்கும் வசதி
2. நன்கொடை அமைப்பு: உலக வங்கி
3. திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - ரூ. 325 மில்லியன்
4. திட்ட காலம் :2018-2020

# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலப் பார்வை

## 2.1 பேரினப் பொருளாதார அபிவிருத்தி

பேரினப் பொருளாதாரத் துறையின் முக்கிய செயற்பாடுகளாக, பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களை ஒருங்கிணைத்தல், வகுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகும். இதற்கு மேலதிகமாக, தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளை செயல்படக்கூடிய திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களாக மாற்றுவதில் திணைக்களத்தின் பிற பிரிவுகளில் பொது முதலீட்டு திட்டத்திற்கான முதலீடுகள் மற்றும் குறிகாட்டிகளின் நிதியுதவியை தீர்மானிக்க இந்த பிரிவு உதவுகிறது. இது தேசிய மற்றும் சர்வதேச சூழலை பகுப்பாய்வு செய்கிறது மற்றும் துறைசார் உத்திகள் மற்றும் துறை திட்டங்களை உருவாக்க பிற பகுதிகளுக்கு பங்களிப்பை வழங்குகிறது.

முன்னேற்றம்

- 2020 - 2023 பொது முதலீட்டு திட்டத்தின் அத்தியாயங்களைத் தயாரிக்க பிற துறைகளுக்கு உதவுதல்.
- 2019-2022 பொது முதலீட்டு திட்டம் குறித்து தேவையான தகவல்களை மத்திய வங்கியின் 2019 ஆம் ஆண்டு அறிக்கைக்கு வழங்குதல்.
- நிகழ்கால பொருளாதார சிக்கல்களை ஆராய்ந்து தொடர்புடைய துறைகளுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

## 2.2. விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடைகள், பெருந்தோட்டம் மற்றும் மீன்வளம்

### விவசாயப் பிரிவு

மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு 7% ஆகக் கணிசமான அளவு குறைவாகக் காணப்படினும் , விவசாயம் இலங்கை பொருளாதாரத்தின் பிரதான பிரிவாகத் திகழ்கிறதுடன் வேலைவாய்ப்பு மற்றும் நாட்டின் உணவு உற்பத்தியை வழங்குகிறது. வருடம் முழுவதுமாகக் காணப்பட்ட COVID -19 தொற்று நாட்டின் விவசாயத் துறையில் மிகக் குறைவான அளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், அனைத்து சவால்களிற்கு மத்தியிலும் , விவசாயத் துறை தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகளினூடாக விவசாயத் துறையை அதிக உற்பத்தி, தொழில்நுட்ப அடிப்படையிலான, நிலையான மற்றும் அதிக இலாபம் ஈட்டும் துறையாக நவீனமயமாக்குவதற்கு எதிர்பார்த்துள்ளதுடன், சர்வதேச சந்தையில் விவசாயம் சார்ந்த பொருட்களின் போட்டித்திறன், உத்தரவாதமளிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் என்பவற்றை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், சந்தை உறவுகள், கட்டுப்பாடு மற்றும் விவசாய சேவைகளை வழங்குதல் போன்ற பிரிவுகளில் அனுபவங்களை நிவர்த்தி செய்வதற்கான அனைத்து துணைத் துறைகளையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த விவசாயக் கொள்கையின் வரைவை பூர்த்தி செய்தல் இந்த ஆண்டின் ஒரு முக்கியமான முயற்சியாகக் காணப்படும்.

### பயிர்ச் விவசாயம்

பயிர்ச் விவசாயத்தில் நெல், காய்கறிகள், ஏனைய விவசாயப் பயிர்கள், பழங்கள், மசாலா பொருட்கள், மலர் வளர்ப்பு மற்றும் அலங்கார இலைகள் உள்ளிட்ட ஏற்றுமதி விவசாய பயிர்கள் காணப்படுகின்றன. பயிர் விவசாய உற்பத்தியின் பின்னடைவை தாங்கிக் கொள்ளும் திறன், அதன் ஏற்றுமதியின் போட்டித்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் வலுவூட்டுவதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பிற வயல் பயிர்கள் (OFC ); சோளம்,

உருளைக்கிழங்கு, வெங்காயம், முந்திரி, மிளகாய், சோளம் (எள்), பச்சை பட்டாணி, தினை மற்றும் சோயாபீன்ஸ் என்பன பெரும் போகம், சிறு போகம் என்பவற்றில் உற்பத்தி செய்யப்படும் நிலையான பயிர்கள் ஆகும். பிற வயல் பயிர்கள் (OFC) பிரதானமாக சிறு விவசாயிகளால் பயிரிடப்படுகிறது மற்றும் வீட்டுத் தோட்டங்களும் பிற வயல் பயிர்களை (OFC) வழங்குவதற்கான ஒரு முக்கிய ஆதாரமாகும். உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்கு உள்நாட்டு உற்பத்தி போதுமானதாக காணப்படவில்லை மற்றும் நிகழ் காலத்தில் காணப்படும் விநியோக பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பல பயிர் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதன் பிரகாரம், இறக்குமதிக்கு பதிலாக உருளைக்கிழங்கு, வெங்காயம், சோளம் மற்றும் மஞ்சள் போன்ற பல பயிர்களின் உள்ளூர் உற்பத்திக்கான அரசாங்கம் வழங்கியுள்ள பங்களிப்பை மேலும் பலப்படுத்தியுள்ளது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விவசாயப் பிரிவினால் நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள்**

- 33 திட்ட முன்மொழிவுகளின் மதிப்பீட்டை முடித்து, தேசியப் பாதீட்டுத் திணைக்களம் மற்றும் வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றிற்கு அவதானிப்புகளை சமர்ப்பித்தது.
- விவசாய அமைச்சு மற்றும் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 10 அமைச்சரவைப் பத்திரங்களிற்கு குறித்த அமைச்சரவை அவதானிப்புகளை சமர்ப்பித்தது.

**விசேட செயற்பாடுகள்**

- விவசாயக் கொள்கையின் விரிவாக்கம் - புதிய அரசாங்க கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப அடிப்படை ஆவணத்தை எளிமைப்படுத்துதல் மற்றும் திருத்துதல் ஆகியவை நிறைவடைந்துள்ளன.
- அரசாங்கத்தினூடாக விதைகளை விநியோகிப்பதை எளிதாக்குவதற்கும் நிறைவு செய்வதற்கும் ஒரு திட்டத்தை தயாரித்தல் மற்றும் 16 பயிர்களால் அதிகரிக்கப்பட்ட துரித உணவு ஊக்குவிப்பு திட்டமான சார்க் நிதி (CERC Financing) இன் கீழ் நிதி பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- COVID க்கு பிந்தைய தேவைகள் மற்றும் வளர்ந்து வரும் பிரச்சினைகளை (ADB) தீர்ப்பதற்கான உத்திகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு விவசாயத் துறைக்கான ஒரு திட்டம் வகுக்கப்பட்டது.
- விவசாயத்திற்கான SDG – Data tracker ஐஆரம்பிப்பதற்கான பங்களிப்பை வழங்கியுள்ளது.
- SAPP கருத் திட்டத்தின் MTR ஐ முடித்தல்
- விவசாயத் துறை நவீனமயமாக்கல் கருத் திட்டத்தின் (பகுதி 2) மறுசீரமைப்பு புதிய அரசாங்க ஆரம்ப முயற்சிகள், அரசாங்கத்தின் நிதி நிலைமை மற்றும் COVID-19 உடன் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ப நிறைவு செய்யப்பட்டது.

**நீர்ப்பாசனம் மற்றும் காணி**

2020 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் துறைக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 53.7 பில்லியன், அந்த தொகையில் ரூ. 45.6 பில்லியன் மூலதன செலவினங்களாகும். நீர் வள அபிவிருத்தியின் கீழ் தற்பொழுதும் ஆரம்பிக்கப்பட்டுள்ள மகாவேலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத் திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத் திட்டம், மொரகஹகந்த மற்றும் கலு கங்க நீர்த்தேக்க அபிவிருத்திக் கருத் திட்டம், கலு கல் ஓயா நீர்த்தேக்கக் கருத் திட்டம், மொரானா நீர்த்தேக்கக் கருத் திட்டம், உமா ஓயா நீர் திசைதிருப்பற் கருத் திட்டம், காலநிலை

தாக்கதைக் குறைக்கும் நோக்கம் கொண்ட கருத்திட்டமாகிய பேரளவு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் என்பன செயற்படுத்தப்படுகின்றன. அதே நேரத்தில், சில நீர்ப்பாசன புனர் நிர்மாண கருத்திட்டங்களினூடாக விவசாயம் மற்றும் ஏனைய நீர் தேவைகளுக்காக நீர் வழங்கலை செயற்படுத்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் காணித் துறையின் மொத்த செலவு ரூ. 9,031 மில்லியன், அதில் ரூ. 3,175 மில்லியன் மூலதன செலவு ஆகும். 2020 ஆம் ஆண்டில், நில உரிமையாளர் வேலைத் திட்டத்திற்கு (பிம்சாவியா) கணிசமான தொகை செலவிடப்பட்டுள்ளது. 2020 இல் அரசாங்க அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக நிலங்கள் இனங்காணப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ளன.

**நீர்ப்பாசனப் பிரிவுக்குரிய விசேட திட்டம்**

- 2021 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நீர்ப்பாசனப் பிரிவில் முதன்மையானதாகக் காணப்படும் கருத் திட்டங்களை ஆராய்ந்து முதலீட்டிற்காக சமர்ப்பித்தல். இதில் 11 வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள், நிறைவடையும் தருவாயில் காணப்படும் 13 பாரிய / இடைநிலை நீர்ப்பாசன திட்டங்கள், புனர் நிர்மானம் மற்றும் பராமரிப்பு மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களைத் தயாரித்தல், காணிகளை இணங்காணுதல், சாத்தியக்கூறு ஆய்வுகள் மற்றும் பூர்வாங்க ஆய்வுகள் என்பன அடங்கும்.
- காலநிலை பின்னடைவு பல்நோக்கு திட்டத்தில் (CREsMP) கடல் மட்டத்திற்கு மேலே காணப்படும் நீர் கடலை நோக்கிய ஓட்டத்திற்கு மாறாக சேமிக்கும் நோக்கத்துடன் நீர்நிலைகளை மறுசீரமைப்பதற்கும், பயனுள்ள, செலவு குறைந்த பொறிமுறையின் மூலம் பயன்பாட்டை உறுதி செய்தல்.
- பொது முதலீட்டு திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கருத் திட்ட மதிப்பீட்டுக் குழுவால் முன்வைக்கப்பட்ட ஆரம்ப அறிக்கையிற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.
- நீர்ப்பாசன அமைச்சுடன் கலந்துரையாடி செலவுகள் செயற்றிறன் மிக்கதாகவும் மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்காக ஒருங்கிணைந்த நீர் மற்றும் நீர்வள முகாமைத்துவக் கருத்திட்டத்தின் (IW & WRMP) கூறுகள் மற்றும் செலவுகள் திருத்தப்பட்டுள்ளன.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்ட நீர்ப்பாசன பிரிவிற்குரிய செயற்பாடுகள்.**

1. நீர்ப்பாசனப் பிரிவின் 11 கருத் திட்ட அறிக்கைகள் மற்றும் காணிப் பிரிவின் 03 கருத் திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்து தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அவதானிப்புகளை வெளிநாட்டு வளங்கள் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களங்களிற்கு ஏனைய நடவடிக்கைகளுக்காகஅனுப்புதல்.
2. நீர்ப்பாசன அமைச்சு மற்றும் காணி அமைச்சு என்பன சமர்ப்பித்த 20 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக் கள் சமர்ப்பிக்கப்பட்டன.
3. மொரகஹகந்த மற்றும் கலு கங்க நீர்த்தேக்க அபிவிருத்திக் கருத் திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், மகாவேலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், தல்பிடிகல நீர்த்தேக்கக் கருத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்திக் கருத் திட்டங்களின் வழி நடத்தல் குழுக் கூட்டங்களில் (Steering committee meetings) செயற்பாட்டு ரீதியில் பங்கேற்றமை.

4. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்திக் கருத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் கொள்கை மறுஆய்வுக் கூட்டங்களுக்கு செயற்பாட்டு ரீதியிலான பங்களிப்பை வழங்குதல்.
5. நீர்ப்பாசனம் மற்றும் காணித் துறை தொடர்பான தேவையான தகவல்களை வழங்குவதன் மூலம் பொது முதலீட்டு திட்டத்தை (2019-2021) புதுப்பிப்பதற்கு உதவுதல்.

**கால் நடைப் பிரிவு**

கால்நடைத் துறை மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்கின்றது மற்றும் முக்கியமாக பால், கோழி, பன்றி, ஆடு மற்றும் செம்மறியாடு என்பவற்றைத் துணைத் துறைகளாகக் கொண்டுள்ளது. இந்தத் துறை தற்போதைய மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 0.7 சதவீதம் பங்களிப்பை வழங்குகிறது, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்கிறது, வேலைவாய்ப்பை வழங்குகிறது மற்றும் சமூகத்தின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துகிறது. 250,000 பால் உற்பத்தி விவசாயிகள் உட்பட சுமார் 600,000 குடும்பங்கள் இத் துறையில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். தற்போது மொத்த உள்நாட்டு பால் உற்பத்தி சுமார் 495 மில்லியன் லிட்டர் ஆகும், இது நாட்டின் தேவையின் 40 சதவீதத்தை பூர்த்தி செய்ய போதுமானதாகும். எனவே, ஏற்றுமதி அதிகரிப்புடன் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்கான உற்பத்தி அதிகரிப்பதானது ஒருங்கிணைந்த வணிகமயமாக்கப்பட்ட விவசாயத்தினூடான மாற்றத்தின் மூலம் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

கோழி வளர்ப்புத் துறை முற்றிலும் தனியார் துறையினரால் செயற்படுத்தப்படுகிறது மற்றும் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கான உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்யும் இயலளவையும் கொண்டுள்ளது. இந்தத் துறையை மேலும் வலுப்படுத்த கோழிச் சுகாதார முகாமைத்துவத் திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் கொள்கை அபிவிருத்தி ஆகியவற்றை செயற்படுத்துவதில் அரசாங்கத்தின் பங்கு பெரும்பாலும் வரையறுக்கப்பட்டே காணப்படுகிறது. கோழி இறைச்சி மற்றும் முட்டைகள் என்பவற்றில் காணப்படும் புரதம் மலிவான ஆதாரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், தேசியப் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கோழி உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் நாட்டின் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பது அவசியமாகும். ஆசியப் பிராந்தியத்தில் பறவைக் காய்ச்சல் இல்லாத நாடாக இருக்கும் சாதக நிலைமையைப் பயன்படுத்தி, ஏற்றுமதிச் சந்தையை கைப்பற்ற தற்பொழுது இத் துறையில் போட்டி நிலைமை காணப்படுகிறது.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கால்நடை பிரிவினால் பூர்த்தி செய்யப்பட பணிகள்

- 9 திட்ட முன்மொழிவுகளிற்கான மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு தேசியப் பாதீடு, வெளி நாட்டு வளங்கள் திணைக்களங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- கால்நடைத் துறை தொடர்பான 3 அமைச்சரவைக் குறிப்புகளிற்கான குறித்த அமைச்சரவை அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பெருந்தோட்டப் பிரிவு**

பெருந்தோட்டத் துறையானது இலங்கை பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. சுபீட்சத்தின் நோக்கு அரசாங்க கொள்கை அறிக்கையின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் பெருந்தோட்டத் துறையில் கட்டமைப்பு மாற்றங்கள் நிகழ்ந்ததுடன், பெருந்தோட்டத் துறையின் குறிக்கோள்கள் அதற்கேற்ற வகையில் அமைந்தன. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் நான்கு இராஜாங்க அமைச்சுக்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் அமைச்சின் மற்றும்

தொடர்புடைய நிறுவனங்களின் கடமைகள் அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அவசியமான விதத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை ஆகியவை பிரதானமான பெருந்தோட்டப் பயிர்களாகக் காணப்படுவதுடன் மிளகு, கருவா, கராம்பு, வெற்றிலை, கரும்பு, சோளம் மற்றும் மஞ்சள் ஆகியவை சிறு பெருந் தொட்டப் பயிர்களாகும். மொத்தத் தேசிய உற்பத்தியில் பெருந்தோட்டத் துறையின் பங்களிப்பு சுமார் 2% ஆகவும், 2019 ஆம் ஆண்டில் பிரதான பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதியால் பெறப்பட்ட அந்நிய செலாவணி சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் காணப்படுகிறது. பெருந்தோட்டத் துறையில் உற்பத்தியை அதிகரித்தல், பயிர் பல்வகைப்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பவற்றிற்காக அரசாங்கம் விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளது. பெருந்தோட்டத் துறையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் ரூ. 2,582 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

**பூர்த்தி செய்யப்பட பணிகள்**

- 48 திட்ட முன்மொழிவுகளிற்கான மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு தேசியப் பாதீடு, வெளி நாட்டு வளங்கள் திணைக்களங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- 4 அமைச்சரவைக் குறிப்புகளிற்கான அமைச்சரவை அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**விசேட செயற்பாடுகள்,**

- சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட புத்துயிர் திட்டங்களில் தேசிய வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில் பங்கேற்றல்.

**மீன்பிடித் துறை**

சுபீட்சத்தின் நோக்கு அரசாங்க கொள்கை அறிக்கைக்கு ஏற்ப அரசாங்கத்தின் நோக்கங்களை அடைய மீன்பிடித் துறையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 2.7 மில்லியன் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடியை நம்பியுள்ளனர் மற்றும் மக்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்வதில் மீன்பிடித்துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. மொத்த தேசிய உற்பத்தியில் மீன்பிடித் துறையின் பங்களிப்பு சுமார் 1.1 சதவீதமாகும். 2019 ஆம் ஆண்டில் மொத்த மீன் உற்பத்தி 505,803 மெட்ரிக் தொன்ன்களாக இருக்கும். இதில் 415,490 மெட்ரிக் தொன்கள் கடல் மீன்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன, மீதமுள்ளவை உள்நாட்டு மீன்வளத் துறையிலிருந்து கிடைக்கப் பெற்றன. 2019 ஆம் ஆண்டில் மொத்த மீன் இறக்குமதி 95,637 மெட்ரிக் தொன், ஏற்றுமதி 28,771 மெட்ரிக் தொன்கள் ஆகும். எனினும், மீன் இறக்குமதி செய்வதற்கான செலவு 218 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், மீன் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட வருமானம் சுமார் 299 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் இருந்தது. அதன் பிரகாரம் , மீன்வளத் துறையை தன்னிறைவு பெறுவது, ஏற்றுமதி நிலைமைகளை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் உணவு பாதுகாப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை அரசாங்கம் செயற் படுத்தியது. அந் நோக்கங்களை அடைவதற்கான திட்டங்கள் அனுமதிக்கப்பட்டன.

**பூர்த்தி செய்யப்பட பணிகள்**

- 18 திட்ட முன்மொழிவுகளிற்கான மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு தேசியப் பாதீடு, வெளி நாட்டு வளங்கள் திணைக்களங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- 8 அமைச்சரவைக் குறிப்புகளிற்கான அமைச்சரவை அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளன

**விசேட செயற்பாடுகள்,**

- களப்பு பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில் பங்கேற்றமை.
- CARP தேசிய வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டமை.
- திட்ட முன்னேற்ற மறுஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றமை

## 2.3 கைத்தொழில், வர்த்தகம், தொழில், மின்வலு மற்றும் எரிசக்தி

### கைத்தொழிற் பிரிவு

இலங்கையைதெற்காசியாவில் ஒரு முக்கிய விநியோக மையமாக மாற்றுவதற்கு கைத் தொழில்துறை மயமாக்கலுக்கு அப்பால் எதிர்பார்க்கப்படுகின்ற உயர் மட்டத்தில் நிலைநிறுத்த தொழில்துறை துறைக்கு பெரும் பொறுப்பு உள்ளது. தேசிய பொருளாதாரத்தின் முக்கியமான பகுதியாக இருக்கும் இந்த துறை, 2019 புள்ளிவிவரங்களின்படி மொத்தத் தேசிய உற்பத்தியில் சுமார் 26% பங்களிப்பை வழங்குகின்றதுடன் மொத்த வேலைவாய்ப்பில் 28% மற்றும் மொத்த ஏற்றுமதி வருவாயில் 78% பங்களிப்பையும் வழங்குகின்றன. கைத் தொழிற்துறையின் மிகப்பெரிய சதவீதத்தை உற்பத்தித் துறை கொண்டுள்ளது, இது இத் துறையின் மொத்தத் தொகுதியில் 17 சதவீதத்திற்கும் அதிகமாகும். கைத்தொழிற் துறையில் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய முக்கிய பகுதிகளாக வணிக மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி, ஆடைத் தொழில் மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் என்பன காணப்படுகின்றன. இந்த பின்னணியில், இந்த சாத்தியமான தொழில்துறை துறைகளை வலுப்படுத்தத் தேவையான கொள்கைகளிற்கான உள்ளீடுகளை தேசிய திட்டமிடல் திணைக்களம் வழங்குகிறது. மேலும், கைத் தொழிற்துறை தொடர்பான கருத் திட்ட முன்மொழிவுகளுக்கான மதிப்பீடுகளில் ஈடுபடுவதுடன் துறைசார் நிதியளிப்புகளிலும் இத் திணைக்களம் ஈடுபாடுகளைக் கொண்டுள்ளது.

நாட்டின் கைத்தொழிற்துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2020 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் துறையால் பின்வரும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

- 65 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து, தேசிய பாதீட்டுத் திணைக்களம், வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய பிரதான நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- கைத்தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 18 அமைச்சரவைப் பத்திரங்களிற்கு குறித்த அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- கைத்தொழில் அமைச்சகம் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் சமர்ப்பித்த புதிய கருத் திட்ட முன்மொழிவுகளுடன் திட்ட சீரமைப்புக்களைப் (Project Pipeline) புதுப்பித்தல்.
- வழிநடத்தல் குழுக்கள், முன்னேற்ற ஆய்வு மற்றும் வெளி நாட்டுப் பணிகள் (Foreign Mission) உள்ளிட்ட கூட்டங்களில் செயற்பாட்டு ரீதியாக பங்கேற்றமை.
- நாட்டின் அபிவிருத்தி கட்டமைப்பிற்கு ஏற்ப பொருத்தமான திட்டங்களை உருவாக்க தொடர்புடைய மத்திய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவையான ஆலோசனை உதவிகளை வழங்குதல்.
- இலங்கையில் தொழில்துறை மேம்பாட்டுக்கான தேசிய கொள்கையை வகுப்பது தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களில் கலந்து கொண்டு தேவையான ஆலோசனை உதவிகளை வழங்குதல்.

### வர்த்தகப் பிரிவு

தேசிய அபிவிருத்திக் கொள்கையின் பிரகாரம், வர்த்தகர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோரின் சமத்துவம் மற்றும் வர்த்தக உரிமைகளை உறுதி செய்யும் உள்ளூர் மற்றும் சர்வதேச தரங்களுடன் ஒருங்கிசைகின்ற ஒரு தேசிய வர்த்தகக் கொள்கையை செயல்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இந்த நோக்கத்திற்காக, ஒரு தேசிய வர்த்தகக் கொள்கையின் மூலம் சந்தை நடத்தையை கட்டுப்படுத்துவதற்காக சுங்க வரிக் கொள்கையை அமுல்படுத்தல் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வரி சலுகைகள் வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல்; அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவதன் மூலம் குறைந்த வாழ்க்கைச் செலவைப் பராமரித்தல்; அரசு நிறுவனங்களினூடாக வாடிக்கையாளர் நிவாரண திட்டங்களைச் செயற்படுத்தத் தேவையான வழிகாட்டல், உணவுப் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காக நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பாதுகாப்பு இருப்புச் சரக்கைப் பராமரிப்பதற்கான சட்டக் கட்டமைப்பு, உட் கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சுகாதார, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பாதுகாப்பதுடன், இறக்குமதி, ஏற்றுமதியை ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றை உறுதி செய்தல்.

**தொழிலாளர் பிரிவு**

பொருளாதாரத்தில் உழைப்பு ஒரு முக்கிய காரணியாகும், இது உற்பத்தியின் நான்கு காரணிகளில் ஒன்றாகும். உழைப்பின் தரம் பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தித்திறனை தீர்மானிக்கின்றது. மேலும், ஊழியர்களுக்கு வழங்கப்படும் பணி நிலைமைகள் மற்றும் ஊதியங்கள் மக்களின் வாழ்க்கைத் தரங்களையும் சமூக நலனையும் தீர்மானிக்கின்றன. இலங்கையில் மொத்தமாக சுமார் 8.6 மில்லியன் தொழிலாளர்கள் உள்ளனர், இது மக்கள் தொகையில் 40 சதவீதத்திற்கு சமமாகும். 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் தொழிலாளர் பங்களிப்பு 52.3 சதவீதமாக இருப்பதுடன், இது ஆண்களில் 73 சதவீதமாகவும், பெண்களில் 34 சதவீதமாகவும் காணபப்டுகிறது. அதிகளவான வேலைவாய்ப்புக்களில் தனியார் துறை ஊழியர்கள் (43%) மற்றும் சுயதொழில் செய்பவர்கள் (சொந்த கணக்கு ஊழியர்கள்) (32.5%) ஆகக் காணப்படுகின்றன. அரச துறை வேலைவாய்ப்புக்கள் மொத்த வேலைவாய்ப்பில் 14.9 சதவீதமாகும்.

**விசேட செயற்பாடுகள்,**

- மத்திய அமைச்சு சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில் 01 அமைச்சரவை அவதானிப்புகள் வழங்கப்பட்டு 03 திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- பொது முதலீட்டு திட்டத்தை புதுப்பித்தல்.
- தேசிய பாதீடு , வெளிநாட்டு வளங்கள் திணைக்களங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய மத்திய நிறுவனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மின்வலு மற்றும் எரிசக்தி**

மின்**வலு** மற்றும் எரிசக்தி துறை மின்சாரம் மற்றும் பெட்ரோலியத் துறைகளைக் குறிக்கிறது. மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்களின் இறக்குமதிகளிற்கு ரூ. 660,000 மில்லியன் செலவிடப்படுகின்றன. நாட்டில் தற்போதைய மொத்த மின் உற்பத்தி மற்றும் நிறுவப்பட்ட கொள்ளளவுகள் முறையே 16,000 GWh மற்றும் 4217 MW ஆகும். இலங்கையில் தனிநபர் மின்சார நுகர்வு 670 kWh ஆகக் காணப்படுவதுடன் நாட்டின் வருடாந்த மின்சார தேவை 5.5% இனால் அதிகரிக்கிறது. மேலும், சூரிய அடிப்படையிலான மின் உற்பத்தியைக் கருத்திற் கொள்ளுமிடத்து, இலங்கை சூரிய சக்தியில் குறிப்பிடத்தக்க வளத்தைக் கொண்டுள்ளது (அதாவது, ஒரு சதுர மீட்டருக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 4 -

4.5 கிலோவாட் மணிநேரம் சூரிய கதிர்வீச்சு). எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியுடன், தொழில் மற்றும் சேவை துறைகளிற்கு மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறைகளின் கேள்வி தொடர்ந்தும் அதிகரிப்பதை அவதானிக்க முடிகிறது. அரசாங்கத்தின் தற்போதைய கொள்கை அறிக்கைக்கு ஏற்ப மின் மற்றும் எரிசக்தி துறையில் அதிகரித்து வரும் இத் தேவையை பூர்த்தி செய்யவதற்காக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அடிப்படியாகக் கொண்டு மின்சாரம் உற்பத்தியை மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை அபிவிருத்தி செய்வதற்கான சமீபத்திய நிகழ்வுகளையும் அரசாங்கம் ஊக்குவித்துள்ளது. அதனடிப்படையில், வழக்கமான மின் உற்பத்தி மூலங்களான நிலக்கரி, இயற்கை எரிவாயு, நீர் மற்றும் எண்ணெய் போன்றவற்றில் இருந்து சூரிய, காற்று, கடல் அலைகள், புவிவெப்ப மற்றும் உயிர்மம் போன்ற வழக்கமான அல்லாத மூலங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. இந்தத் துறையின் "கார்பன் நடுநிலைமையை" மீறாமல் மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறையின் விருத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் தனது முழு ஆதரவையும் வழங்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பங்களிப்பை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- தேசிய திட்டத் திணைக்களம் 17 திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து அவற்றிற்குரிய அவதானிப்புகளை வழங்கியுள்ளது.
- "தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் இயற்கை எரிவாயு தொடர்பான தேசிய கொள்கை" பற்றிய அமைச்சரவைப் பத்திரங்கள் உட்பட 13 அமைச்சரவைப் பத்திரங்களிற்கு அவதானிப்புகளை வழங்கியுள்ளது.
- வெளிநாட்டுப் பணிகள் தொடர்பான நடவடிக்கைகளிற்கு அவதானிப்புக்களை வழங்கியுள்ளமை
- இலங்கையில் அணுசக்தி அபிவிருத்தித் திட்டம் குறித்த குழுக்களில் கலந்துகொண்டமை.
- இயற்கை எரிவாயு தொடர்பான தேசிய கொள்கையை வகுப்பதில் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியமை.
- "இயற்கை எரிவாயு மற்றும் அதை செயல்படுத்துவதற்கான உத்திகள் பற்றிய தேசிய கொள்கை" குறித்த பொது ஆலோசனையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கியமை.

## 2.4 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான போக்குவரத்து

உள் நாட்டில் மற்றும் உலகின் பிற பகுதிகளுடன் பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருட்களை கொண்டு செல்வதற்குத் திறமையான போக்குவரத்து சேவைகளை வழங்குவது இந்த பிரிவுகளின் முக்கிய செயற்பாடுகளாகும். வழமை போன்று முதலீட்டிற்கான முக்கிய பகுதிகளாக, அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி, வீதிகள் கலப்படுத்துதல் மற்றும் மறு சீரமைத்தல், வீதிப் பராமரிப்பு மற்றும் பாலங்கள் அமைத்தல், நவீனமயமாக்கல் மூலம் பொது போக்குவரத்தை மேம்படுத்துதல், நகர்ப்புற-கிராமப்புற இணைப்புகளை மேம்படுத்துதல், சாலை போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், சாலை விபத்துகளைக் குறைத்தல், துறைமுக விரிவாக்கம் மற்றும் விமான நிலைய உள்கட்டமைப்பு மேம்படுத்தல் என்பன 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

### விஷேடமான செயற்பாடுகள்

- தொடர்புடைய மத்திய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 16 புதிய கருத் திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களின் மதிப்பீடு.

- நெடுஞ்சாலை அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு அல்லது வீதிகள், போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான போக்குவரத்து தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பித்த எந்தவொரு அமைச்சாலும் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் கொள்கை ஆவணங்கள் குறித்த அவதானிப்புகளைத் தயாரித்தல். அமைச்சரவைப் பத்திரங்களிற்காக மொத்தமாக 21 அமைச்சரவை அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதில் தொடர்புடைய அமைச்சுக்களிற்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியமை.
- பின்வரும் குழுக்களின் உறுப்பினராக செயற்பட்டமை.
  - தேசிய போக்குவரத்துக் கொள்கை, தேசிய சாலைக் கொள்கை, தேசிய துறைமுகங்கள் மற்றும் கடல்சார் கொள்கை ஆகியவற்றை மேம்படுத்துதல்
  - பஸ் கட்டணங்களை திருத்துதல் மற்றும் பஸ் உரிமங்களை வழங்குதல்
  - கருத் திட்ட வழிநடத்தல் குழுக்கள்
  - வெளிநாட்டு உதவிக்கான Aide Memoire குறித்து கருத்துக்களை வெளியிட்டமை.

## 2.5 நகர்ப்புற அபிவிருத்தி, வீட்டுவசதி, நீர் மற்றும் சுற்றாடல்

### நகர்ப்புற அபிவிருத்தி, வீட்டுவசதிப் பிரிவு

நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதிப் பிரிவு, தொடர்பாகக் காணப்படும் மத்திய அமைச்சுக்களுடன் இணைந்து, நாட்டில் நகர்ப்புற உட் கட்டமைப்புக்களை நிறுவுதல், தற்பொழுது காணப்படும் வசதிகளை நெறிப்படுத்துதல், பல்வேறு அணுகுமுறைகளின் கீழ் அனைவருக்கும் வீட்டு வசதிகளை வழங்குவதற்கான கொள்கைகளை மற்றும் உத்திகள் என்பவற்றின் உருவாக்கம் மற்றும் செயற்படுத்துவதற்கு அவசியமான பங்களிப்புக்களை வழங்கியமை. ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்கள் வழங்கப்படுவது பொருளாதார சாத்தியங்கள் குவிந்துள்ள நகர்ப்புறங்களால் ஆகும். நம் நாட்டின் மக்கள் தொகையில் கணிசமான பகுதியினர் ஏற்கனவே நகரமயமாக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்றனர். எனினும், நகரமயமாக்கலை அளவிடுவதற்கு முறையான நிறுவப்பட்ட அளவுகோல்கள் காணப்படாமையால் ஒரு நாட்டில் நகரமயமாக்கலின் சதவீதத்தை திருத்தமாக மதிப்பிடுவது கடினமாகும். நகரங்களில் அபிவிருத்தித் திறனை இனங்காண்பது எதிர்கால முதலீடுகளை முறையாக நிலைநிறுத்த அனுமதிக்கிறது. எனவே, நிலையான நகரமயமாக்கலுக்கான தடைகளை குறைப்பதற்கும் பொருளாதாரத்தின் சரியான செயற்பாட்டை எளிதாக்குவதற்கும் நகர்ப்புற வளர்ச்சியை முறையான, ஒன்றோடொன்று இணைக்கக்கூடிய மற்றும் அணுகக்கூடிய வகையில் வடிவமைக்கப் படல் வேண்டும். நாட்டில் உள்ள 6 மில்லியன் குடும்பங்களில், 5.2 மில்லியன் பேருக்கு மட்டுமே சில வகையான வீடுகள் உள்ளன. எனவே, சொந்த வீடு இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை 800,000 ஐயும் தாண்டியுள்ளது. மேலும், தற்போதைய வீடுகளின் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 300,000 தற்காலிகமாக உருவாக்கப்பட்டுள்ளதென்பதால் சிக்கல்கள் இன்னும் அதிகரித்துள்ளன.

எனவே, நிலையான நகரமயமாக்களை உருவாக்குவதற்காகவும், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்பாட்டு ரீதியில் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், வீட்டுவசதிகளை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நகர்ப்புறங்கள் மற்றும் வீட்டுவசதி ஆகியவற்றை முறையான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு உதவும் கருத் திட்டங்களை இணங்கண்டு செயற்படுத்துவதற்கான

நடவடிக்கைகளை மேற்கொண்டு மற்றும் அவற்றிற்கு அவசியமான கொள்கைகளை உருவாக்குவதற்கான பங்களிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**செயற்பாடுகள்**

- தொடர்புடைய மத்திய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 21 அமைச்சரவை குறிப்புகளுக்கான அவதானிப்புகளை வழங்குதல்
- நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டுவசதி தொடர்பான 25 திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கைகளுக்கு அவற்றை வழிநடத்துதல்.
- நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டுத் துறைப் பிரிவுடன் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல்
- பொது முதலீட்டுத் திட்டத்தைப் புதுப்பித்தல்
- தொடர்புடைய மத்திய அமைச்சுக்களால் செயற்படுத்தப்படும் வெவ்வேறு கருத்திட்டங்களில் இணங்காணப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பங்காளிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் மற்றும் அபிவிருத்தித் தேவைகளை சரியாக இணங்காண்பதற்காக, அவசியமான பங்களிப்புக்களை வழங்குவதுடன் அந் நடவடிக்கைகளை தேசிய அபிவிருத்திக் கோட்பாட்டுடன் ஒருங்கிணைத்தல்.
- மத்திய நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதற்காக தொடர்புடைய மத்திய அமைச்சுக்கள் மற்றும் முகவர் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

**நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு**

சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரத்திற்கான அணுகல் மக்களின் சுகாதார மற்றும் சமூக-பொருளாதார வாய்ப்புகளுக்கு மட்டுமல்லாமல், நிலையான அபிவிருத்தி இலக்குகள் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைவதற்கும் அவசியமாகும். நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு, நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்கும் நீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பிற்கான அதிகளவான அணுகல்கள் அவசியமாகும். "சுபீட்சத்தின் நோக்கு" அரசாங்க கொள்கை கட்டமைப்பு அடுத்த நான்கு ஆண்டுகளில் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சுத்தமான குடிநீரை வழங்குவதை முன்னுரிமைத் துறையாக அடையாளம் கண்டுள்ளது. தேசிய திட்டமிடல் திணைக்களம், நீர்வழங்கல் அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை , தேசிய நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் பிற துறை பங்குதாரர்களுடன் நெருக்கமாக செயற்படுவதுடன் கொள்கை உருவாக்கம் மற்றும் கருத்திட்டம், நிரல் செயல்படுத்தல் ஆகியவற்றில் இந்த நிறுவனங்களுக்கு தேவையான கொள்கை உள்ளீடுகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குகிறது. மேலும், இந்த ஆண்டு இந்த பிரிவினால் பின்வரும் துறை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

1. நீர் வழங்கல் அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்கள் சமர்ப்பித்த பின்வரும் கருத் திட்ட முன்மொழிவுகள் முதற்கட்டமாக ஆய்வு செய்யப்பட்டு, அவை தொடர்பான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கருத்துக்கள், அவதானிப்புகள் மற்றும் கருத் திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட பரிந்துரை அறிக்கைகள் தேசியப் பதீட்டுத் திணைக்களம், வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய மத்திய அமைச்சுக்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
   I. பரிந்துரைக்கப்பட்ட கருத் திட்டங்கள்

- Greater Galle நீர் வழங்கல் திட்டத்தின் குறுகிய கால நீர் வழங்கல் அபிவிருத்தித் திட்டம் - கட்டம் 1
- நீர் வழங்கல் மற்றும் சுகாதார அபிவிருத்தித் திட்டம் - மேலதிக நிதி
- நாட்டில் குழாய் நீர் பாதுகாப்பை அதிகரிக்கும் திட்டம்.

II. பின்வரும் திட்டங்களை ஆராய்ந்து மதிப்பீடு செய்த பின்னர், கருத் திட்டம் தொடர்பான கருத்துகள் மற்றும் விளக்கங்கள் மத்திய அமைச்சுக்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- குருநாகல பகுதி மக்களுக்கு காலநிலை நெகிழ்திறன் குடிநீர் வழங்கல் திட்டம்.
- தேதுரு ஓயா நீர் வழங்கல் திட்டம் - மேலதிக நிதி.
- கொழும்பு வடக்கிற்கான கழிவு நீர் முகாமைத்துவ கருத் திட்டம்.
- கெடபே நீர் சுத்திகரிப்பு ஆலை மறுசீரமைப்புத் திட்டம்.
- ஹம்பேகமுவ நீர் வழங்கல் கருத் திட்டம்.
- கழிவு நீர் இணைப்புகளை அபிவிருத்தி செய்தல், சேவைகளை வழங்குதல், இருக்கும் கழிவு நீர் திட்டங்களின் செயற்திறனை விருத்தி செய்தல்.
- நகரங்களிற்கான சுகாதாரப் பாதுகாப்பு கருத் திட்டங்கள் - நீர் கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ கருத் திட்டம் - கட்டம் II.
- கருத் திட்ட நோக்க மாற்றம் - Greater Galle மற்றும் காலி நீர் வழங்கல் திட்டத்திற்குரிய குறுகிய கால முன்னேற்றத் திட்ட முன்மொழிவு - கட்டம் I.

2. தொடர்புடைய அமைச்சுக்களினூடாக சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் அமைச்சரவை குறிப்புக்களிற்குரிய அவதானிப்புகள் / கருத்துகளைத் தயாரித்தல்.
   - 2025 ஆம் ஆண்டில் குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதிகளை 3.07% ஆக உயர்த்துவதற்கான மூலோபாயத் திட்டம்.
   - எப்பாவலை, இராஜாங்கனை , நொச்சியாகமை, கிரிபாவா நீர் வழங்கல் திட்டம்.
   - Greater Colombo நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ அபிவிருத்தி முதலீட்டுத் திட்டம் - கட்டம் III.
   - நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு அபிவிருத்தித் திட்டங்களிற்குரிய காலத்தை நீடித்தல்.
   - யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் - மேலதிக நிதி (ADB), யாழ் மாவட்டம் தலையடி பிரதேசத்தில் RO நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்.
3. தற்போது செயற்பாட்டில் உள்ள கருத் திட்டங்கள் தொடர்பான வெளிநாட்டு பணிகள் ஆரம்ப கூட்டங்கள், இறுதிக் கூட்டங்கள் மற்றும் கருத் திட்ட வழிநடத்தல் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றமை.
4. வெளிநாட்டு நிதிகளால் செயற்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் மறுஆய்வு செய்து அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக நீர் வழங்கற் பிரிவின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் விரிவான பட்டியலைத் தயாரித்தல் மற்றும் அந்தக் கூட்டங்களில் பங்கேற்றல்.

**சுற்றுச்சூழல் முகாமைத்துவம் அனர்த்த முகாமைத்துவம்**

பொருத்தமான முதலீடுகள் மூலம் வலுவான பொருளாதார வளர்ச்சியை எளிதாக்கும் அதே வேளையில் சுற்றுச்சூழல் தரத்தை உறுதிசெய்து நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. மாசற்ற சூழலையும் நச்சுத்தன்மையற்ற உணவையும் உறுதிப்படுத்த

சுற்றுச்சூழல் கொள்கையில் பசுமை வளர்ச்சி என்ற கருத்து முக்கிய பங்கு வகிக்கிறது. குறைந்த கார்பன் நுகர்வுடன் தூய்மையான பசுமையான சூழலை அடைதல், சுற்றாடல் மாசடைவைக் குறைத்தல், உயரிய உயிர்ப் பல்வகைமை மற்றும் சுற்றுச்சூழற் தொகுதி சேவைகள், சூழல் அபாயங்களைக் குறைத்தல், வினைத்திறனான மற்றும் நிலையான வள நுகர்வு மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தை குறைத்தல் ஆகியவை சுற்றுச்சூழல் முகாமைத்துவப் பிரிவினால் கருத்திற் கொள்ளப்படுகிறது. சமநிலையான சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நடைமுறைகள் மூலம் நிலையான வளர்ச்சியை அடைவதற்கு சுற்றுச்சூழல் முகாமைத்துவம் ஒரு அத்தியவசியமானதாகும். எனவே, அபிவிருத்திக்குரிய வேலைத் திட்டத்தில், சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுவதற்கு அவசியமான உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழற் தொகுதிகளில் சரியான கவனம் செலுத்த வேண்டியது அத்தியவசியமானதொன்றாகும். மேலும், நாட்டில் இயற்கை அழிவுகள் வேகமாக அதிகரித்து வருவதால், மனித உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் கடுமையான சேதம் ஏற்படுகிறது. மேலும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மனித வளங்கள் நேரடியான பங்களிப்பை வழங்குவதால் நாட்டு மக்களை பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பது மிக முக்கியமானதாகும். எனவே, நாட்டில் இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளால் ஏற்படும் பேரழிவுகளை வினைத்திறனான முறையில் தடுப்பதன் மூலமும் கட்டுப்படுத்துவதன் மூலமும் அவர்களின் வாழ்க்கையின் ஒற்றுமை, செழிப்பு மற்றும் கௌரவத்தை எளிதாக்குவதன் மூலம் சமூகத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நிலையான மற்றும் அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**விசேட சந்தர்ப்பங்கள்**

- சுற்றுச்சூழல் முகாமைத்துவத்துறை தொடர்பான மத்திய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 20 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்.
- மத்திய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 21 அமைச்சரவைக் குறிப்புகளுக்கான அவதானிப்புகளை வழங்குதல்
- பொது முதலீட்டு திட்டம் 2020 - 2022 ஐ புதுப்பிக்க உதவுதல்
- கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுக்க தொடர்புடைய மத்திய அமைச்சுக்களிற்கு மற்றும் முகவர் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

## 2.6 சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், விளையாட்டு மற்றும் கலாச்சாரம்

**சுகாதாரப் பிரிவு**

சுகாதாரத் துறைக்கு மாத்திரமின்றி நாட்டின் சீரான செயற்பாட்டிலும் COVID 19 தொற்றுநோய் காரணமாக இதற்கு முன்பு ஏற்படாதவாறான தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற உதவி வழங்கும் நிறுவனங்களின் ஆதரவோடு, சர்வதேசப் பரவலிற்கான தயார் படுத்தல், தொற்று நோய் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல் என்பவற்றிற்காக அரசாங்கம் பெருமளவில் முதலீடுகளை செய்துள்ளது. இத் தொற்றுநோய் காலங்களின் போது, சுகாதாரத் துறை மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்த அரசாங்கம் பல்வேறு கொள்கை சீர்திருத்தங்களை ஆரம்பித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில், தேசிய திட்டமிடல் திணைக்களம் சுகாதாரத் துறை தொடர்பான பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

செயற்பாடுகள்

- 12 கருத் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு செயற்படுத்துவதற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்புடைய அவதானிப்புகள் குறித்த மத்திய அமைச்சு, தேசிய பாதீட்டுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பப்பட்டுள்ளன.
- சுகாதார அமைச்சு, மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் நெறிப்படுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சு மற்றும் சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 04 அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- சுகாதாரத் துறைக்காக எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்ட கருத் திட்டங்களை கருத்திற் கொண்டு கருத்திட்ட வரிசையை புதுப்பித்தல்.
- சுகாதாரத் துறை தொடர்பாக செயற்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படும் கருத் திட்டங்கள் குறித்த கூட்டங்களை ஒழுங்கு செய்து குறித்த அவதானிப்புக்களை உலக சுகாதார தாபனம் , உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிதி உதவி வழங்கும் நிறுவனங்களின் முகவர்களிற்கு முன்வைத்தல்.

### விளையாட்டுப் பிரிவு

2020 ஆம் ஆண்டில், அரங்கங்களை புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், செயற்கை தடங்கள் அமைத்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்களை விநியோகித்தல் உள்ளிட்ட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் அரசு விளையாட்டுத் துறையில் முதலீடு செய்துள்ளது.

இது தொற்றுநோயற்ற நோய்களுக்கான அரசாங்க செலவினங்களைக் குறைத்து பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதோடு விளையாட்டை நாட்டின் கலாச்சாரம் மற்றும் சமுதாயத்தின் ஒரு அங்கமாக மாற்றுவதையும், முழு மக்களையும் உள்ளடக்கிய ஒரு ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு, கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட் கட்டமைப்பு அபிவிருத்திற்காக இராஜாங்க அமைச்சு என்பன விளையாட்டுத் துறையின் அபிவிருத்திற்கான பிரதானமான அமைச்சுகளாகும்.

தேசிய திட்டமிடல் திணைக்களமானது 2020 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகளை நிறைவு செய்தது.

- 04 கருத்திட்ட திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு, குறித்த அமைச்சுகளால் சமர்ப்பிக்கப்பட்ட 03 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- பொது முதலீட்டு திட்டத்தை 2019-2021 புதுப்பிப்பதற்காக விளையாட்டு அமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடனான கூட்டங்களை ஏற்பாடு செய்தமை.

## 2.7 கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் விருத்தி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்

### கல்வி பிரிவு

மனிதவள மேம்பாடு நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான முக்கிய கருவியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. நன்கு அபிவிருத்தியடைந்த மனித வளங்கள் நாடு அறிவு சார்ந்த பொருளாதாரத்தை அடைவதை உறுதி செய்கிறது. இந்த சூழலில், ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் கலவையான பொதுக் கல்வி, வளர்ந்து வரும் உலகளாவிய பொருளாதாரத் தேவைகளுடன் போட்டியிடும் திறன் கொண்ட குழந்தைகளின் ஆளுமையின் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

2020 ல் மத்திய அரசு செய்த முதலீடு ரூ. 25,753 மில்லியன் மற்றும் அது 2019 ல் ரூ. 28,422 மில்லியனாக இருந்தது. இருப்பினும், 2020 ஆம் ஆண்டளவில், கட்டிட கட்டுமானம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முன்னுரிமை காரணமாக மூலதனச் செலவு அதிகரித்துள்ளது.

### பாடசாலைக் கல்வி

2016 - 2020 ஆம் ஆண்டுகளில் கல்வி அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டத்தின் மூலம் தரமான கல்விக்குச் சமமான அணுகலை உறுதி செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் நலன்புரி வசதிகளை மேம்படுத்துதல் என்பன உருவாக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, அறிவு மற்றும் திறன்களுடனான மாணவர்களை சமூகத்தினுள் பரவலடையச் செய்யும் நோக்கில் பாடசாலை மாணவர்களிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட சுரக்ஸா மாணவர் காப்பீட்டு திட்டம் 2020 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டது. மேலும், '13 ஆண்டு கல்வி' திட்டத்தில் இலவச கல்வியில் தொழில் திருப்பம் என்ற கருப்பொருளின் கீழ் செயற் படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இடைநிலைக் கல்வித் துறையை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, உள் நாட்டு உதவிகளுடன் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 1,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஸ்மார்ட் கல்வி என்ற கருத்து உலகளாவிய கொரோனா தொற்றுநோயைக் கையாள்வதற்கான ஒரு வழியாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

### மேற்கொள்ளப்பட்ட பிரதானமான செயற்பாடுகள்

- பொதுக் கல்விப் பிரிவின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் முன்மொழியப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் குறித்து கல்வி அமைச்சு , கல்வி சீர்திருத்த இராஜாங்க அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களில் செயற்பாட்டு ரீதியில் பங்கேற்றமை.
- கல்வித் துறை மேம்பாட்டுத் திட்டங்களை (E.S.D.P) ஒழுங்கமைத்தல், பங்கேற்பது மற்றும் திட்ட வழிநடத்தல் குழுக்களில் பங்கேற்றமை.
- கல்வி அமைச்சு மற்றும் கல்வி சீர்திருத்த இராஜாங்க அமைச்சுக்கள் சமர்ப்பித்த புதிய கருத்திட்ட அறிக்கைகள் உட்பட எதிர்கால திட்ட வரிசைகளைப் புதுப்பித்தல்.
- கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 05 அமைச்சரவைப் பத்திரங்களிற்கு குறித்த அவதானிப்புகளை வழங்குதல் மற்றும் பொதுக் கல்வி தொடர்பான 05 புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

### உயர்கல்விப் பிரிவு

அரச பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக அனுமதி வீதத்தை அதிகரிப்பது மற்றும் அரச பல்கலைக்கழகங்களுக்கு புதிய பீடங்களையும் கட்டிடங்களையும் நிறுவுவதன் மூலம் உயர் கல்வித் துறை 2020 ஆம் ஆண்டில் பரவலாக விரிவடைந்துள்ளது. கட்டுமானத்திற்கான ஒதுக்கீடுகள் பிரதானமாக அரச பல்கலைக்கழகங்களில் விரிவுரை அரங்குகள், விடுதிகள், நூலகங்கள், ஆய்வகங்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிறுவுதல், நகர்ப்புற பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு, புற்றுநோய் கண்டறிதலுக்கான குறிப்பு மையம் மற்றும் திருத்தமான சுகாதார ஆராய்ச்சி உள்ளிட்ட 28 ஆராய்ச்சி திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும், உயர் கல்வித் துறையில் பல்வேறு துறைகளுக்கு வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் ஆராய்ச்சி மானியங்கள் மூலம் தரமான பட்டதாரிகளை உருவாக்குவதற்கும், பட்டப்படிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதற்குமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டில், நாட்டில் மாணவர்களுக்கு உயர் கல்விக்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் அரசு சாரா உயர்கல்வி நிறுவனங்களை முறைப்படுத்தவும் விரிவுபடுத்தவும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**மேற்கொண்ட பிரதானமான செயற்பாடுகள்**

- உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பான புதிய கருத் திட்டங்கள் குறித்த கலந்துரையாடல்களில் செயற்பாட்டு ரீதியில் பங்கேற்றமை.
- வெளிநாட்டு உதவித் திட்டங்கள் தொடர்பான பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை ஒழுங்கமைத்தல் மற்றும் இயக்குதல் மற்றும் கருத்திட்ட வழிநடத்தல் குழு கூட்டங்களில் பங்கேற்றமை.
- உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு சமர்ப்பித்த புதிய கருத்திட்ட அறிக்கைகள் உட்பட எதிர்கால திட்ட பட்டியலைப் புதுப்பித்தமை.
- உயர்கல்வி பிரிவு தொடர்பாக பெறப்பட்ட 22 அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் 28 திட்ட முன்மொழிவுகளை பரிந்துரைத்தமை.

**தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு**

தேசிய அபிவிருத்தியின் முன்னணி இயக்கியாக தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு முறையாக இணங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சந்தை செயன்முறைகள் மற்றும் அரசு இயந்திரங்களை எளிமைப்படுத்துவதன் மூலம், திறமையான மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட சேவையை வழங்குதல், தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் கட்டுப்பாட்டை விரிவுபடுத்துதல், சர்வதேச இலத்திரனியல் - கட்டண முறையை நிறுவுதல் மற்றும் தரவுப் பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமைக்கான புதிய சட்டங்கள் மற்றும் நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதற்கு தேசிய முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் , சர்வதேச தரத்திற்கு ஏற்ப தொகுதிகளைப் புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்ட உட் கட்டமைப்பு தொடர்பான சேவைகளை வழங்குவதில் தனியார் துறை முக்கிய பங்கு வகிக்கிறது, அத்துடன் தகவல் தொடர்பாடல் வசதிகளை விரிவுபடுத்துதல், தகவல் மற்றும் தொழில்நுட்பத்திற்கு உட் செல்லல், இலத்திரனியல் - ஆளுமை மற்றும் ஒழுங்குமுறை வசதிகளை மேம்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மேற்கொண்ட பணிகள்**

1. குறித்த மத்திய அமைச்சுக்கள் சமர்ப்பித்த 04 கருத் திட்டங்கள் மற்றும் அவற்றின் மதிப்பீடு.
2. தகவல் மற்றும் தொடர்பு பிரிவு தொடர்பான 01 அமைச்சரவைப் பத்திரத்திற்குரிய அவதானிப்பை வழங்கியமை.
3. குறித்த அமைச்சுக்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்தமை.

**விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு**

ஒரு நாட்டில் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் தரமான வாழ்க்கையையும் அடைவதற்கு, போட்டித்தன்மை மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்து கொள்வதற்கும் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பவற்றிற்கு இயலுமை உண்டு. அதன் பிரகாரம், இந்த துறையில் அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோள்களாக அமைவது தேவை அடிப்படையிலான ஆராய்ச்சி, ஆராய்ச்சி வணிகமயமாக்கல், புதுமை ஊக்குவிப்பு, தரப்படுத்தல் மற்றும் சான்றிதழ் வசதி ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு அரசு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு சரியான வழிகாட்டுதலை வழங்குவதாகும். இப் பணியை நிறைவேற்றுவதற்காக, ஆராய்ச்சி, நிதி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களிற்கு இடையே ஒரு இணைப்பை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கொண்ட பணிகள்

1. குறித்த மத்திய அமைச்சுக்களால் அனுப்பப்பட்ட 6 கருத் திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்களின் மதிப்பீடு.
2. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி பிரிவு தொடர்பான 01 அமைச்சரவைப் பத்திரத்திற்கான அவதானிப்பை வழங்கியமை.
3. குறித்த அமைச்சுக்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

**திறன் கல்வி மற்றும் இளைஞர் விவகாரப் பிரிவு**

நாட்டிற்கு ஈர்க்கக்கூடிய பொருளாதார விருத்தியை நெருங்குவதற்கு மிகவும் திறமையான பணியாளர்கள் காணப்படுவது அவசியம் என்பதால் தற்போதைய தேசியக் கொள்கையின் கட்டமைப்பில், நாட்டின் பொருளாதார விருத்தியின் முக்கிய இயக்கிகளாக குடிமக்களின் அறிவு மற்றும் திறன்களின் முக்கியத்துவத்திற்காக குறிப்பிடத்தக்க இடம் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், வேகமாக வளர்ந்து வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதிக வேதனங்களை எதிர்ப்பார்க்கும் பயிற்சியாளர்களுக்கும் வளர்ந்து வரும் தொழில்துறை தேவையுடையோருக்கும் அமைவாக உயர் பயிற்சி பெற்ற திறமையான பணியாளர்களை உருவாக்குவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**மேற்கொண்ட பணிகள்**

1. இளைஞர் விருத்தி மற்றும் திறன் விருத்தித் பிரிவு தொடர்பான 11 கருத் திட்ட முன்மொழிவுகள் மதிப்பீட்டிற்காக பெறப்பட்டன, அவற்றில் 07 திட்டங்கள் முறையாக மதிப்பீட்டு செய்யப்பட்டு அறிக்கைகள் தேசிய பாதீட்டுத் திணைக்களம் / வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய மத்திய அமைச்சுக்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

2. திறன் கல்வி மற்றும் இளைஞர் விவகார பிரிவு தொடர்பான 02 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
3. திறன் விருத்திப் பிரிவு தொடர்பான குறித்த அமைச்சுக்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தமை.

## 2.8 பிராந்திய வளர்ச்சி சுற்றுலா மற்றும் சமூகப் பாதுகாப்பு

### பிராந்திய வளர்ச்சிப் பிரிவு

ஒவ்வொரு சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும், தனித்துவம் மற்றும் பன்முகத்தன்மையை அங்கீகரிப்பதன் மூலம் அபிவிருத்தி செய்வது பிராந்திய அபிவிருத்தி பிரிவின் தேசியக் கொள்கையாகும். தேசிய அளவில் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் கிடைக்கும் வளங்களை உகந்த மற்றும் நிலையான பயன்பாட்டின் முக்கியத்துவத்தை இந்த பிரிவு வலியுறுத்துகிறது. பொருளாதார வளர்ச்சி வீதம், மனித அபிவிருத்தித் தரவு, சமூகத் தரவு மற்றும் காலப்போக்கில் அவற்றின் மாற்றங்கள் ஆகியவற்றின் பகுப்பாய்வின் போது 9 மாகாணங்களில் நிகழும் அடிப்படை அபிவிருத்தித் தொடர்பான பிரச்சினைகள், முரண்பாடுகள் மற்றும் சவால்களை வெளிப்படுத்துகிறது. அவற்றில், பிராந்திய வளர்ச்சி ஏற்றத்தாழ்வுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியம் என்பதுடன் அவை அந்தந்தச் சமூகங்களின் வாழ்க்கைத் தரங்கள், மனித அபிவிருத்திச் சுட்டி, தொழில்மயமாக்கலின் நிலை, விவசாயத்தின் நிலை மற்றும் உட் கட்டமைப்பு அபிவிருத்தி என்பவற்றுடன் நெருக்கமான தொடர்பை கொண்டுள்ளன.

ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பொருளாதார மையமாக கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் மேற்கொண்ட அனைத்து முயற்சிகள் மற்றும் தேசிய அபிவிருத்தித் திட்டத்தை நேரடியாக கிராமத்துடன் இணைப்பதற்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. பிராந்திய அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் பார்வையானது கிராமப்புற வளர்ச்சியை பிராந்திய வளர்ச்சியுடன் இணைப்பதாகும். நகரங்கள் பெரு நகரங்களாகவும் கிராமங்கள் பிராந்திய ரீதியாகவும் அபிவிருத்தியடையும் பொழுது நாடு முழுவதும் அபிவிருத்தி அடையும்.

அபிவிருத்தி ஏற்றத் தாழ்வை குறைப்பது சுதந்திரத்திற்குப் பின்னர் அனைத்து ஆட்சிகளிலும் முக்கியமாக கருதப்படுகிறது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம், மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை நிறுவுதல், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளை நிறுவுதல், "கம் உதாவ" திட்டம், ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல், பிராந்திய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துதல், "கம நெகும" மற்றும் "புற நெகும" திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் என்பன பிரதேச அபிவிருத்தி ஏற்றத்தாழ்வுகளை குறைத்துக் கொள்வதை நோக்காகக் கொண்ட சில வேலைத் திட்டங்கள் ஆகும். பிராந்திய அபிவிருத்திப் பிரிவு ஏனைய பல்வேறு துறைகளுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புறுவதால்,அத் துறைகளால் செயற்படுத்தப்படும் திட்டங்களும் பிராந்திய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு முக்கியமாகும்.

### விசேட செயற்பாடுகள்

1. மத்திய அமைச்சினூடாக சமர்ப்பிக்கப்பட்ட 02 அமைச்சரவைப் பாத்திரங்களிற்காக அவதானிப்புக்கள் வழங்கப்பட்டு கருத்திட்ட முன்மொழிவு 01 மதிப்பீடு செய்யப்பட்டது.
2. பொது முதலீட்டு திட்டத்தை புதுப்பித்தல்.

3. தேசிய பாதீட்டுத் திணைக்களம், வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய மத்திய நிறுவனங்களிற்கான அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**சுற்றுலாப் பிரிவு**

சுற்றுலாத் துறை இலங்கையின் முன்னணி தொழில்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி வருவாயின் பிரதான மூலமாக பொருளாதாரத்திற்கு 3,607 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் 2019 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பு 4.3 சதவீதமாக இருந்தது. எனினும், 2018 உடன் ஒப்பிடும்போது, 2019 இல் ஈஸ்டர் தாக்குதலின் காரணமாக சுற்றுலாத் துறையின் வருவாய் 4,381 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 17.7% ஆகவும், சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.334 மில்லியனிலிருந்து 18% ஆகவும் குறைந்துள்ளது.

அந்நிய செலாவணி வருவாய் மற்றும் அபிவிருத்தியை எளிதாக்கக்கூடிய ஒரு துறையாகிய சுற்றுலாத் துறை தேசிய கொள்கையின் கட்டமைப்பிற்குள் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய துறையாக, சுபீட்சத்தின் நோக்கு இணங்கண்டுள்ளது. சுற்றுலாத் துறையிலிருந்து வருவாயை 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்த்துவது, சுற்றுலாப் பயணிகளின் வருகையை 7 மில்லியனாக உயர்த்துவது, தற்போதுள்ள ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது மற்றும் சுற்றுலாத்துறையில் பணியாளர்களின் எண்ணிக்கையை 2025 க்குள் 1 மில்லியனாக உயர்த்துவது இதன் மூலம் எதிர்ப்பார்க்கபப்டுகிறது.

**விசேட செயற்பாடுகள்**

1. மத்திய அமைச்சு சமர்ப்பித்த 03 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் 01 திட்ட முன்மொழிவு மதிப்பீடு செய்யப்பட்டது.
2. பொது முதலீட்டு திட்டத்தை புதுப்பித்தல்.
3. தேசிய பாதீட்டுத் திணைக்களம், வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய மத்திய நிறுவனங்களுக்கு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**சமூகப் பாதுகாப்புப் பிரிவு**

ஒட்டுமொத்த சமூக பாதுகாப்புத் துறையினருக்கான ஒரு விரிவான ஒருங்கிணைந்த மூலோபாயத்தை உருவாக்குவதற்கும், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோர் உட்பட சமூகத்தின் அனைத்து தரப்பினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களிற்கு அதிகாரமளிப்பதினூடாக நாட்டின் அபிவிருத்திற்குரிய பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட சமூக பாதுகாப்பு திட்டங்களை செயற்படுத்துவதற்காக அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்கிறது.

சமுர்த்தி, வீட்டு பொருளாதாரம், நுண் நிதி, சுய வேலைவாய்ப்பு மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன் பள்ளிகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பள்ளி உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சு என்பவற்றிற்கு சிறுவர்கள், ஆதரவற்ற பெண்கள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோர் உட்பட அபாய நிலைமைகளிற்கு உட்பட முடியுமான பகுதிகளை சீரான நிலைக்கு கொண்டு வருவதை உறுதி செய்யும் பிரதான பொறுப்பு காணப்படுகிறது.

**பூர்த்தி செய்யப்பட பணிகள்**

- **கருத் திட்ட முன்மொழிவுகலிற்கான மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளைத் தயாரித்தல்** - கருத் திட்ட முன்மொழிவுகளிற்கான மதிப்பீட்டு அறிக்கை பாதீட்டுத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய அமைச்சுக்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. குறித்த அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- தேசிய சமூகப் பாதுகாப்பு உத்திகள் குறித்த இடைவெளி பகுப்பாய்வு அறிக்கைக்கான (Gap analysis report) பரிந்துரைகள்.
- கொள்கை மறுஆய்வு மற்றும் மதிப்பீடு - பின்வரும் கொள்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு அவதானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

  - ஆரம்பகால குழந்தை பருவ மேம்பாட்டுக் கொள்கை

  - COVID - 19 திட்டம்

- பின்வரும் திட்டங்களுக்கு கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

  - "தெற்காசியாவில் அபிவிருத்தியடைந்து வரும் உறுப்பு நாடுகளின் பாலின சமத்துவம் மற்றும் சமூக இணைவு விளைவுகளை மேம்படுத்துதல்" என்பவற்றிற்கான ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டம்.

  - "நிலையான இலக்குகளை அடைய சமூக பாதுகாப்பிற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவை மேம்படுத்துதல்" என்பவற்றிற்கான ஆசிய அபிவிருத்தி வங்கித் திட்டம்.

  - S.D.G Programmatic Bond இற்கான ஐக்கிய நாடுகளின் ஒன்றிணைந்த கூட்டம்.

- கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல் - சமூக பாதுகாப்பு பிரிவில் தொடர்புடைய மத்திய நிறுவனங்களால் நிகழ்த்தப்பட்ட வழிநடத்தல் குழு கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மறுஆய்வுக் கூட்டங்களில் கலந்துகொண்டு சமூக பாதுகாப்பு செயல்திறனை மேம்படுத்த தேவையான உள்ளீடுகளை வழங்கியது.

## 2.9. பொது முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்

பொது முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சித் துறையில் கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கான பங்கு தேசிய கொள்கை கட்டமைப்பின் கொள்கைகளுக்கு ஏற்ப செயற்படுத்தப்பட்டது.

நவீன தொழில்நுட்பம், புதுமை மற்றும் நல்லாட்சி ஆகியவற்றின் அடிப்படையில் மக்களை மையமாகக் கொண்ட மற்றும் தோழமையான பொதுச் சேவைக்காக சட்ட ஆட்சியை உறுதி செய்தல், நாட்டின் நிலையான அபிவிருத்தியை அடைவதன் மூலம் பொது மக்களின் பங்களிப்புடன் ஜனநாயக சுதந்திரத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் திறமையான பொதுத் துறையை நிறுவுவதற்காக அரசாங்கம் பெரு முயற்சியை மேற்கொள்கிறது. மேலும், தேசிய பாதுகாப்பை மையமாகக் கொண்டு தோழமையான மற்றும் சீர்குலையாத வெளியுறவுக் கொள்கையை பராமரிப்பதற்காகவும், ஊழலிலிருந்து விடுபட்ட ஒழுக்கமான பொதுச் சேவையையும், சட்டத்தின் அடிப்படையிலான ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதும் நல்லாட்சியின் மூலம் மென்மேலும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதனால், நாட்டின் பொது

நிறுவனங்களை தொடர்ச்சியாக முன்னேற்றுதல், மனிதவள விருத்தி மற்றும் சேவை வழங்கலில் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் என்பவற்றிற்காக பொதுத்துறையின் உற்பத்தித்திறனையும் செயல்திறனையும் மேம்படுத்துவதற்கு அவசியமாகும்.

பொது நிர்வாகம், பொதுப் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, ஊடகங்கள், நீதித்துறை, வெளிநாட்டு உறவுகள், கலாச்சாரம் மற்றும் தேசிய பாரம்பரியம் தொடர்பான விடயங்கள் நல்லாட்சியின் பிரதான பகுதிகளாவதுடன், அதற்கு மேலதிகமாக ஜனாதிபதிச் செயலகம், பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்ற விசேட செலவின அலகுகள் தொடர்பான கருத்திட்ட மதிப்பீட்டு செயற்பாடுகளும் நல்லாட்சி பிரிவின் விடய எல்லைக்குள் கருதப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பொது முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சித் துறையின் முன்னேற்றத்திற்காக அளித்த பல்வேறு விதமான பங்களிப்புக்கள் பின்வருமாறு:

- 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு கிடைக்கப்பெற்ற 139 திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகள் தேசிய பாதீட்டுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பப்பட்டுள்ளன.
- பொது முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சிப் பிரிவு தொடர்பான பல்வேறு அமைச்சுக்களிலிருந்து பெறப்பட்ட 12 அமைச்சரவைப் பத்திரங்களிற்காக கௌரவ நிதி அமைச்சரின் அவதானிப்புகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன.
- பொது முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சிப் பிரிவு தொடர்பான கருத் திட்ட வழிநடத்தல் குழு கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மறுஆய்வுக் கூட்டங்களில் அவ்வப்போது கலந்துகொண்டு அப் பிரிவுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியது.
- துறைக் கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதில் தொடர்புடைய மத்திய அமைச்சுக்களிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது.
- பொது முதலீட்டு திட்டங்களை வகுக்க குறித்த அதிகாரிகளுடன் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் ஏற்பாடு செய்து நடத்தியது.

## அத்தியாயம் 03 - 2020 மார்கழி 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன்

### 3.1 நிதிச் செயற்றிறன் கூற்று

ACAF

### 31.12.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்குரிய நிதிச் செயற்திறன் கூற்று

ரூ

| பாதீடு 2020 | | குறிப்பு | உண்மை 2020 | உண்மை 2019 |
|---|---|---|---|---|
| - | **வருமானம்** | | - | - |
| - | வருமான வரி | 1 | - | - |
| - | உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான வரி | 2 | - | - |
| - | சர்வதேச வர்த்தகத்திற்கான வரி | 3 | - | - |
| - | வரியற்ற வருவாய் மற்றும் பிற | 4 | - | - |
| - | **மொத்த வருவாய் பெறுவனவுகள் (அ)** | | - | - |
| - | **வருவாய் அல்லாத பெறுவனவுகள்** | | - | - |
| - | திறைசேரிக் கட்டுநிதி | | 108,053,408 | 105,489,000 |
| - | வைப்புக்கள் | | 85,906 | 29,115 |
| - | முற்பணக் கணக்குகள் | | 7,232,008 | 8,093,164 |
| - | வேறு பெறுவனவுகள் | | 5,112,407 | 4,725,440 |
| - | **மொத்த வருமானமற்ற பெறுவனவுகள் (ஆ)** | | **120,483,728** | **118,336,719** |
| - | **மொத்த வருமானப் பெறுவனவுகள் மற்றும் வருமானமற்ற பெறுவனவுகள் (இ) = (அ) +(ஆ)** | | **120,483,728** | **118,336,719** |
| | **கழிக்கப்பட்டது : செலவுகள்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| - | **மீண்டு வரும் செலவுகள்** | | **-** | - |
| 85,000,000 | சம்பளம், ஊதியங்கள் மற்றும் ஏனைய பணியாளர் அனுகூலங்கள் | **5** | 83,748,297 | 72,655,651 |
| 23,327,642 | வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் | **6** | 20,017,346 | 25,218,218 |
| 1,000,000 | மானியங்கள், வழங்கல்கள் மற்றும் மாற்றங்கள் | **7** | 950,429 | 859,075 |
| - | செலுத்திய வட்டி | **8** | - | - |
| - | ஏனைய மீண்டு வரும் செலவுகள் (ஈ) | **9** | - | - |
| **109,327,642** | | | **104,716,071** | **98,732,944** |
| | **மூலதனச் செலவுகள்** | | | |
| 1,275,000 | மூலதனச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடுகள் | **10** | 1,216,613 | 2,672,121 |
| 4,547,358 | மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்துதல் | **11** | 3,887,968 | 2,937,101 |
| - | மூலதன இடமாற்றங்கள் | **12** | | - |
| - | நிதி சொத்துக்களைக் கையகப்படுத்துதல் | **13** | | - |
| 1,500,000 | திறன் விருத்தி | **14** | 794,770 | 4,411,292 |
| 32,600,000 | ஏனைய மூலதன செலவுகள் | **15** | 32,158,606 | 40,862,055 |
| **39,922,358** | **மொத்த மூலதனச் செலவுகள் (உ)** | | **38,057,957** | **50,882,568** |
| | **பிரதானமான பதிவேட்டுச் செலவுகள் (ஊ)** | | **7,017,423** | **5,619,305** |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 78,456 | 29,115 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 6,938,967 | 5,590,190 |
| | **மொத்தச் செலவுகள் எ = (ஈ +உ+ஊ)** | | **149,791,451** | **155,234,817** |
| **149,250,000** | **2020 மார்கழி 31 இன் படி மீதி ஏ = (இ - எ)** | | **(29,307,722)** | **(36,898,098)** |

### 3.2. நிதி நிலமைக் கூற்று

ACA - P

## 2020.12.31 திகதிக்குரிய
## நிதி நிலமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை 2020 ரூ. | 2019 ரூ. |
|---|---|---|---|
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து மற்றும் உபகரணங்கள் | ACA-6 | 87,441,485 | 102,640,033 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்கு | ACA-5/5(A) | 14,042,155 | 14,335,196 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | ACA-3 | 912 | 15,227 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **101,484,552** | **116,990,456** |
| தேறிய சொத்துக்கள் / நிறை நிகரச் சொத்துக்கள் | | 14,034,705 | 14,335,196 |
| சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம் | | 87,441,485 | 102,640,033 |
| முற்பண வாடகை மற்றும் வேலை | ACA-5(B) | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்கு | ACA-4 | 7,450 | - |
| கட்டுநிதி மீதி | ACA-3 | 912 | 15,227 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **101,484,552** | **116,990,456** |

පිටු අංක 05.සිට 54 දක්වා ඒසීඒ 1 සිට ඒසීඒ 6 දක්වා වූ ආකෘති පත්‍රවලින් ඉදිරිපත් කෙරෙන ගිණුම් තොරතුරු සහ සටහන
පිටු අංක 55 සිට 62 දක්වා ඇතුළත් ගිණුම් සටහන් විස්තර ද මෙම අවසන් ගිණුමෙහිම අන්තර්ගත කොටස් වේ. මෙම මූල්‍ය
ප්‍රකාශන පිළියෙල කිරීම පොදුවේ පිළිගත් ගිණුම් මූලධර්මවලට අනුකූලව සිදුකර ඇති අතර මෙහිදී මූල්‍ය ප්‍රකාශයන්හි සටහන්
මගින් හෙළිදරව් කර ඇති පරිදි වඩාත් සුදුසු ගිණුම්කරණ ප්‍රතිපත්ති භාවිතා කර ඇත. ඉහත අවසන් ගිණුමෙහි සඳහන් සංඛ්‍යා
ඊට අදාළ ගිණුම් සටහන් හා අනෙකුත් ගිණුම් තොරතුරු භාණ්ඩාගාර ගිණුම් පොත් සමග සැසඳීම් කර ඇති බවටත් ඒවා එම
සංඛ්‍යා සමග එකඟ වන බවටත් මෙයින් සහතික කරමු.

.............................
ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරි
නම : එස්.ආර්.ආටිගල
තනතුර : ලේකම්
දිනය : 2021.02. 20

එස්. ආර්. ආටිගල
මහා භාණ්ඩාගාරයේ සහ මුදල් අමාත්‍යාංශයේ ලේකම්
මුදල් අමාත්‍යාංශය
මහලේකම් කාර්යාලය
කොළඹ 01.

.............................
ගණන්දීමේ නිලධාරි
නම : ආර්.එච්.ඩබ්.ඒ.කුමාරසිරි
තනතුර : අධ්‍යක්ෂ ජනරාල්
දිනය : 2021.02. 18

ආර්.එච්.ඩබ්ලිව්.ඒ. කුමාරසිරි
අධ්‍යක්ෂ ජනරාල්
ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුව
මුදල් අමාත්‍යාංශය
මහලේකම් කාර්යාලය
කොළඹ 01

.............................
ප්‍රධාන මූල්‍ය නිලධාරි/ප්‍රධාන ගණකාධිකාරි/
අධ්‍යක්ෂ (මුදල්)/ කොමසාරිස් (මුදල්)
නම : ඩබ්.එස්.පී.ද මෙල්
දිනය : 2021.02.18

ඩබ්ලිව්.එස්.පී. ද මෙල්
ගණකාධිකාරි
ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුව
පළමු මහල, මහලේකම් ගොඩනැගිල්ල
කොළඹ - 01

**3.3. காசுப் பாய்ச்சல் கூற்று** **ACA - C**

## 2020.12.31 திகதியில் முடிவடைந்த வருடத்திற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2020<br>ரூ. | 2019<br>ரூ. |
| <u>செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படும் காசுப் பாய்ச்சல்</u> | | - |
| மொத்தமாக பெற்ற வரி | - | - |
| கட்டணம், அதிக கட்டணம், அபராதம் மற்றும் உரிமங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானமற்ற பெறுவனவுகள் | | |
| பிற தலைப்புகலிற்காக சேகரிக்கப்பட்ட வருவாய் | 5,112,407 | 197,577 |
| கட்டுநிதி பெறுகை | 108,053,408 | 105,489,000 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படும் காசுப் பாய்ச்சல் (அ) | **113,165,815** | **105,686,577** |
| <u>கழிக்கப்பட்டது : பணச் செலவு</u> | | |
| தனிநபர் சம்பளம் மற்றும் இயக்க செலவுகள் | 103,609,022 | 88,842,180 |
| மானியங்கள் மற்றும் மாற்றம் | 950,429 | 859,075 |
| பிற செலவினத் தலைப்புகளிற்காக ஏற்படும் செலவுகள் | 1,174,153 | 195,667 |
| பொதுத் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 912 | 15,227 |

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைககளிற்கு செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ) | **105,734,516** | **89,912,149** |
| | | |
| செயற்பாட்டு நடிவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்படும் தேறிய காசுப் பாய்ச்சல் (இ) = (அ) - (ஆ) | **7,431,299** | **15,774,428** |
| **<u>முதலீட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்படும் காசுப்பாய்ச்சல்</u>** | | |
| வட்டி | - | - |
| இலாபம் | - | - |
| உரிமை அற்றுப் போவதால் ஒதுக்கீடு மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| மானியக் கட்டணங்கள் | - | - |
| முற்பணப் பெறுகை | 7,337,681 | 282,439 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படும் காசுப் பாய்ச்சல் (ஈ) | **7,337,681** | **282,439** |
| **<u>கழிக்கப்பட்டது : பணச் செலவு</u>** | | |
| பௌதீக சொத்து கட்டுமானம் அல்லது கொள்முதல் மற்றும் பிற முதலீடுகளைப் பெறுதல் | 8,074,314 | 11,880,197 |
| முற்பணச் செலவுகள் | 6,702,117 | 4,151,370 |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்கான செலவிடப்படும் மொத்த காசுப் பாய்ச்சல் (உ) | **14,776,430** | **16,031,567** |
| முதலீட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) = (ஈ) - (உ) | **(7,438,749)** | **(15,749,128)** |
| **செயற்பாடுகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படும் தேறிய காசுப் பாய்ச்சல் (எ) = (இ) + (ஊ)** | **(7,450)** | **25,300** |
| **<u>நிதி நடவடிக்கைகளால் உருவாக்கப்படும் காசுப்பாய்ச்சல்</u>** | | |
| உள் நாட்டுக் கடன் பெறுகை | - | - |
| வெளி நாட்டுக் கடன் பெறுகை | - | - |
| மானியங்கள் பெறுகை | - | - |
| வைப்புப் பெறுகை | 85,906 | 3,815 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஏ)** | **85,906** | **3,815** |
| | | |
| **<u>கழிக்கப்பட்டது : பணச் செலவுகள்</u>** | | |
| உள் நாட்டுக்கடன் திருப்பிச் செலுத்துதல் | - | - |
| வெளிநாட்டு கடன் திருப்பிச் செலுத்துதல் | - | - |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 78,456 | 29,115 |
| **நிதி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்தக்** | **78,456** | **29,115** |

| | | |
|---|---|---|
| **காசுப் பாய்ச்சல் (ஓ)** | | |
| **நிதி நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஓ) = (ஏ) - (ஓ)** | **7,450** | **(25,300)** |
| **காசில் தேறிய மாற்றம் (ஔ) = (எ) - (ஓ)** | **-** | **-** |
| **தை 01 ஆம் திகதி ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **மார்கழி 31 ஆம் திகதி இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

**3.4 நிதிக் கூற்றிற்கான குறிப்பு - - -**

### 3.5 வருமானம் சேகரிப்பின் செயற்றிறன் – பொருந்தாது

ரூ. ,000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விளக்கம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | பெறுமானம் (ரூ.) | இறுதி வருமான மதிப்பீடு % ஆக |
| - | - | - | - | - | - |

### 3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயற்றிறன்

ரூ. ,000

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, பூரணப்படுத்தப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுப் பெறுமானத்தின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| **மீண்டுவரும் (11)** | 109,450,000 | 109,327,642 | 104,716,071 | 95.78 |
| துணை மொத்தம் | **109,450,000** | **109,327,642** | **104,716,071** | **95.78** |
| **மூலதனம்**<br>உள்நாட்டு நிதி (11) | 7,200,000 | 7,322,357.76 | 5,899,351.37 | 80.57 |
| **கருத்திட்ட தயாரிப்பில் வசதிகள் வழங்கும் வேலைத்திட்டம்** | | | | |
| வெளிநாட்டுக்கடன் (12) | 25,100,000 | 30,100,000 | 29,983,643 | 99.61 |
| வெளிநாட்டு நிதிகளுடன் தொடர்புடைய உள்நாட்டு செலவுகள் (17) | 2,500,000 | 2,500,000 | 2,174,962 | 87.00 |
| துணை மொத்தம் | **34,800,000** | **39,922,358** | **38,057,957** | **95.33** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| மொத்தம் | 144,250,000 | 149,250,000 | 142,774,028 | 95.66 |

**3.7. நி.பி 208 இற்கு அமைவாக இந்த திணைக்களம் / மாவட்ட செயலகம் / ஏனைய அமைச்சுக்களிற்கு முகவராகிய மாகாண சபை / திணைக்களங்கள் என்பவற்றின் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள்**

ரூ. ,000

| வரிசை எண் | ஒதுக்கப்பட்ட அமைச்சு / திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, பூரணப்படுத்தப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுப் பெறுமானத்தின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| | | பொருந்தாது | | | | |

**3.8. நிதி அல்லாத சொத்துக்களின் செயற்றிறன் கூற்று**

ரூ. ,000

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விளக்கம் | 31.12.2020 திகதியில் சரக்கு ஆய்வு அறிக்கையின்படி மீதி | 31.12.2020 திகதியில் நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிடப்பட வேண்டிய | முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | | | | |
| 9152 | இயந்திரங்கள் | 87,441,485 | 87,441,485 | | |
| 9153 | காணி | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9154 | தொடுகையுற முடியாத சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை | | | | |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | | | | |

### 3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளர் நாயகம் வழங்கிய இறுதி கணக்காய்வு அறிக்கை இணைப்பு । இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 04 – செயற்றிறன் காட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற் திட்டத்தின் அடிப்படையில்)

| குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகள் | உண்மை வெளியீடு எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) | | |
|---|---|---|---|
| | 100%- 90% | 75%-89% | 50%- 74% |
| வடிவமைக்கப்பட்ட கொள்கைகளின் எண்ணிக்கை | 100% | | |
| மதிப்பீடு செய்யப்பட்ட கருத் திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 93 % | | |
| வழங்கப்பட்ட அவதானிப்புகளின் எண்ணிக்கை | 100% | | |
| மதிப்பீடு செய்யப்பட்ட தேசிய / துணை தேசிய திட்டங்களின் எண்ணிக்கை | 100% | | |
| பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | 100% | | |

## அத்தியாயம் 05 - நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயற்திறன்

### 5.1 இணங்காணப்பட்டுள்ள அந்தந்த நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிக்கவும்

மத்திய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தித் திட்டங்கள், வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கான நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் தொடர்புடைய இலக்குகளை அடைவதற்கும் தேவையான வழிகாட்டுதல்களை தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

### 5.2 நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குக

பொருந்தாது

## அத்தியாயம் 06 - மனிதவள சுயவிவரம்

### 6.1 நிரந்தர ஊழிய முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | காணப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடம் / (அதிக) ** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 59 | 46 | 13 |
| மூன்றாம் நிலை | 02 | 00 | 02 |
| இரண்டாம் நிலை | 28 | 17 | 11 |
| ஆரம்ப நிலை | 29 | 20 | 09 |

### 6.2 நிறுவனத்தின் செயற்திறனில் மனித வளங்களில் குறைவு அல்லது அதிகரிப்பு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை சுருக்கமாக எடுத்துரைக்க.

போதியளவு ஊழியரின்மையால், கடமைகளைச் செய்வதில் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுகிறது.

## 6.3. மனித வள அபிவிருத்தி

| வேலைத்திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை | வேலைத் திட்டத்தின் கால எல்லை | மொத்த முதலீடு (Rs'000) | | வேலைத் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | வெளியீடு / பெற்ற அறிவு * |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளி நாட்டு | | |
| தனி நபர் கோப்புகளின் திறமையான பராமரிப்பு | 01 | 01 நாள் | 4000.00 | | உள்நாட்டு | உத்தியோகபூர்வ கடமைகள் குறித்த அறிவை விருத்தி செய்தல் |
| அரச உத்தியோகத்தர்களின் விடுமுறை ஏற்பாடுகள் | 01 | 02 நாட்கள் | 8500.00 | | உள்நாட்டு | - அவ்வாறே - |
| பொதுப் பெறுகை முறை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் டிப்ளோமா பாடநெறி (மிலோடா) | 01 | 01 வருடம் | 100000.00 | | உள்நாட்டு | - அவ்வாறே- |
| முதுகலை பட்டம் வேலைத்திட்டம் | 02 | 01 வருடம் | 268500.00 | | உள்நாட்டு | - அவ்வாறே- |
| அரச நூலகர்களிற்கு இணையம் அறிவு மற்றும் சமூக ஊடக பயன்பாடு குறித்த கருத்தரங்கு | 01 | 01 நாள் | 20000.00 | | உள்நாட்டு | - அவ்வாறே- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில உயர் டிப்ளோமா | 01 | 02 வருடங்கள் | 20000.00 | | உள்நாட்டு | - அவ்வாறே- |

## அத்தியாயம் 07 - உடன்பாட்டறிக்கை

| இலக்கம் | பொருந்தக் கூடிய தேவை | உடன்பாடு நிலை (உடன்பாடுண்டு / உடன்பாடின்மை) | உடன்பாடற்றது எனின் அது தொடர்பான ஒரு சுருக்கமான விளக்கம் | உடன்பாடின்மையை எதிர்காலத்தில் தடுப்பதற்காக முன்மொழியப்பட்ட திருத்தமான முடிவுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதிநிலைமை அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | உடன்பாடுண்டு | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | உடன்பாடுண்டு | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வியாபார முற்பணக் கணக்குகள்) | உடன்பாடின்மை | | |
| 1.4 | களஞ்சியசாலை முற்பணக் கணக்கு | உடன்பாடின்மை | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | உடன்பாடின்மை | | |
| 1.6 | வேறு | உடன்பாடின்மை | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின் பராமரிப்பு (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | | | |
| 2.2 | தனி நபர் ஊதிய ஆவணங்கள் / தனி நபர் ஊதிய அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 2.3 | கணக்காய்வு ஆவணங்களைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வுப் பதிவு ஆவணங்களைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | உடன்பாடுண்டு | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து உரிய தேதியில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | உடன்பாடுண்டு | | |
| 2.6 | காசோலை மற்றும் பண ஆணைப் பதிவேட்டைப் புதுப்பித்து பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 2.7 | இருப்பு ஆவணங்களைப் புதுப்பித்து பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 2.8 | சரக்கு தொடர்பான ஆவணங்களைப் புதுப்பித்துப் பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 2.9 | சேதம் /நட்டம் பதிவேட்டை புதுப்பித்து பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 2.10 | பொறுப்புப் பட்டியலைப் புதுப்பித்து பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 2.11 | துணை துண்டுப்பிரசுர புத்தக பதிவேட்டை(GA - | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | N20) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான செயற்பாடுகளின் பிரதிநிதித்துவம் (நி.பி 135)** | | | |
| 3.1 | நிறுவனத்திற்குள் நிதி அதிகாரம் பகிர்ந்தளித்துள்ளமை | உடன்பாடுண்டு | | |
| 3.2 | நிதி அதிகாரங்களின் பகிர்ந்தளிப்பு குறித்து நிறுவனத்தினுள் அறிவிப்புச் செய்திருத்தல் வேண்டும் | உடன்பாடுண்டு | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகளால் அங்கீகரிக்கும் விதத்தில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது | உடன்பாடுண்டு | | |
| 3.4 | 11.05.2014 தேதியிட்ட இலக்கம் 171/2004 இன் அரசு கணக்கு சுற்றறிக்கை படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவதில் கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுதல் | உடன்பாடுண்டு | | |
| 4 | **வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற் திட்டம் தயாரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 4.2 | வருடாந்தப் பெறுகைத் திட்டம் தயாரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரித்தல் | | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து, தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு (N.P.D) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | உடன்பாடுண்டு | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கையை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | உடன்பாடுண்டு | | |
| 5 | **கணக்காய்வு விசாரணைகள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் நிர்ணயித்த திகதியில் அனைத்து கணக்காய்வு வினாக்களிற்கும் பதிலளித்தல் | உடன்பாடுண்டு | | |
| 6 | **உள்ளக கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி 134 (2) D.M.A / 1-2019 இன் படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | உடன்பாடின்மை | | |
| 6.2 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | உடன்பாடுண்டு | | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (4) துணைப்பிரிவிற்கு அமைவாக அனைத்து | உடன்பாடின்மை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | | | |
| 6.4 | நி.பி 134 (3) இன் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளையும் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பித்தல் | உடன்பாடின்மை | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்** | | | |
| 7.1 | D.M.A சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை குறித்த ஆண்டில் பராமரித்திருக்க வேண்டும் | உடன்பாடுண்டு | | |
| 8 | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | இலக்கம் 01/2017 குறிக்கும் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் அத்தியாயம் 07 இன் பிரகாரம் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் முறைகேடாகப் பயன்படுத்துதல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பித்தல். | உடன்பாடுண்டு | | |
| 8.2 | மேற்கண்ட | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்பிரகாரம் அந்த சுற்றறிக்கையின் விதிகளை நிறைவேற்றுவதற்கு ஒரு பொருத்தமான தொடர்பு அதிகாரியை நியமித்து, அந்த அதிகாரி பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு தெரிவித்தல். | | | |
| 8.3 | பொது நிதி சுற்றறிக்கை எண் 05/2016 இன் பிரகாரம் இருப்புக் கணக்கெடுப்புகளை நடத்தியிருக்க வேண்டும் மற்றும் தொடர்புடைய அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | உடன்பாடுண்டு | | |
| 8.4 | வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள்செய்திருத்தல். | உடன்பாடுண்டு | | |
| 8.5 | ஓரமாக ஒதுக்கப்பட்ட பொருட்களை அகற்றுவது நி.பி 772 க்கு இணங்க செயல்படுகிறது | உடன்பாடுண்டு | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | பூல் வாகனங்களுக்கான தினசரி சாரதிப் பதிவுகள் | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | | | |
| 9.2 | வாகனம் ஓரமாக ஒதுக்கப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றல் | உடன்பாடுண்டு | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்களை பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாக. நி.பி 103,104,109, மற்றும் 110 க்கு இணங்க செயற்படல் | உடன்பாடுண்டு | | |
| 9.5 | 29.12.2016 திகதியிடப்பட்ட இலக்கம் 2016/30 பொது நிர்வாக சுற்றறிக்கை இன் 3.1 இன் விதிகளின்படி வாகனங்களை எரிபொருள் திறனை மறு ஆய்வு செய்தல் | உடன்பாடுண்டு | | |
| 9.6 | குத்தகைக் காலத்திற்குப் பிறகு, வாகன பதிவு புத்தகங்களின் முழு உரிமையும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. | உடன்பாடுண்டு | | |
| 10 | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கி இணக்க அறிக்கைகளை உரிய திகதியில் தயாரித்து சான்றளித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் | உடன்பாடுண்டு | | |
| 10.2 | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் போது அல்லது அதற்கு முன் | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்வைக்கப்பட்ட செயலற்ற வங்கி கணக்குகளை தீர்த்து வைத்திருக்க வேண்டும் | | | |
| 10.3 | வங்கி இணக்க அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்யப்பட்ட நிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமானங்களின் பிரகாரம் செயல்பட்டு, அந்த நிலுவைகளை ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைத்திருத்தல். | உடன்பாடுண்டு | | |
| 11 | **ஒதுக்கப் பயன்பாடு** | | | |
| 11.1 | வழங்கப்பட்ட ஒதுக்கங்களை அவற்றின் எல்லைகள் மீறா வண்ணம் செலவு செய்தல் | உடன்பாடுண்டு | | |
| 11.2 | நி.பி 94 (1) இற்கு அமைவாக ஒதுக்கத்தைப் பயன்படுத்திய பின்னர் வருட இறுதியில் வழங்கப்பட்ட ஒதுக்கத்தின் எல்லை மீறா வண்ணம் கடன் படுதல். | உடன்பாடுண்டு | | |
| 12 | **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்** | | | |
| 12.1 | எல்லைகளிற்கு இணங்குதல். | உடன்பாடுண்டு | | |
| 12.2 | நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளை ஒரு நேர பகுப்பாய்வு செய்தல். | உடன்பாடுண்டு | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் நிலுவைத் | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையை தீர்த்தல் | | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | தாமதமான வைப்புக் குறித்து நி.பி 571 இன் படி செயற்படல். | உடன்பாடுண்டு | | |
| 13.2 | பொது வைப்பிற்காக கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்து பராமரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் பண புத்தகத்தின் நிலுவைத் தொகையை திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பல் | உடன்பாடுண்டு | | |
| 14.2 | நி.பி 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட உடனடி இடைக்கால கட்டுநிதி, அந்த பணி முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படல். | உடன்பாடுண்டு | | |
| 14.3 | நி.பி 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத உண்மையான இடைக்கால கட்டுநிதியை வெளியிடுதல். | உடன்பாடுண்டு | | |
| 14.4 | கட்டுநிதி கணக்கு மீதி, திறைசேரிப் புத்தகங்களுடன் மாதாந்த ஒப்பீடு | உடன்பாடுண்டு | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | குறித்த விதிமுறைகளின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானத்தைத் மீளச் செலுத்தல். | உடன்பாடின்மை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15.2 | சேகரிக்கப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படாது, நேரடியாக வருமானத்திற்கு வரவு வைத்தல் | உடன்பாடுண்டு | | |
| 15.3 | நி.பி 176 இன் பிரகாரம் வருமான அறிக்கைகளின் நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | உடன்பாடின்மை | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் ஊழியர்களை வைத்திருத்தல் | உடன்பாடுண்டு | | |
| 16.2 | அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்து வடிவில் கடமை பட்டியல்களை வழங்கியிருக்க வேண்டும் | உடன்பாடுண்டு | | |
| 16.3 | 20.09.2017 திகதியிட்ட M.S.D சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் பிரகாரம் அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | உடன்பாடுண்டு | | |
| 17 | **பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் சட்டம் மற்றும் விதிமுறைகளின் பிரகாரம் ஒரு தகவல் அதிகாரியை நியமித்தல் மற்றும் ஒரு தகவல் | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆவணத்தை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | | | |
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்கப்படுகின்றன, மேலும் வலைத்தளம் மூலமாகவோ அல்லது மாற்று வழிகள் மூலமாகவோ இந்த நிறுவனம் குறித்த பாராட்டுக்களை / குற்றச்சாட்டுகளை வெளியிட பொதுமக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி வைத்துள்ளன. | உடன்பாடுண்டு | | |
| 17.3 | தகவல் அறியும் சட்டத்தின் பிரிவு 08 மற்றும் 10 ன் பிரகாரம் ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | உடன்பாடுண்டு | | |
| 18 | **குடிமக்களின் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| 18.1 | இலக்கம் 05/2008 மற்றும் 05/2018 (1) இன்பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு குடிமகன் / வாடிக்கையாளர் சாசனம் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல். | உடன்பாடுண்டு | | |
| 18.2 | அச் சுற்றறிக்கையின் பந்தி 2.3 இன் பிரகாரம், குடிமக்கள் / வாடிக்கையாளர் | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சாசனத்தின் வரைவு மற்றும் செயல்பாட்டை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனங்களால் ஒரு அமைப்பு உருவாக்கபட்டுள்ளன. | | | |
| 19 | **மனித வள திட்டத்தின் தொகுப்பு** | | | |
| 19.1 | 24.01.2018 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனிதவளத் திட்டம் தயாரித்தல் | உடன்பாடுண்டு | | |
| 19.2 | ஊழியர்களில் ஒவ்வொரு ஊழியருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வசதிகள் மேலே உள்ள மனிதவள திட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படல் வேண்டும். | உடன்பாடுண்டு | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின் அடிப்படையில் முழு ஊழியர்களுக்கும் ஆண்டு செயல்திறன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருக்க வேண்டும் | உடன்பாடுண்டு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பதந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றிற்காக ஒரு சிரேஷ்ட அதிகாரியை நியமித்திருத்தல் வேண்டும். | உடன்பாடுண்டு | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளிற்கு பதிலளித்தல்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தால் வழங்கிய கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளது. | உடன்பாடுண்டு | | |